# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 410

சனி, 26 செப்ரெம்பர், 2026 | பக்கங்கள் 16

www.ilakku.org













# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தில் காவல்துறையினரால் பதற்றம்



யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில் முன்னெடுக்கப்பட்ட அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தில் காவல்துறையினர் குழப்பம் விளைவித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலையொட்டி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் அமைதியான முறையில் அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக இன்று (25) காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் நடைபெறும் இடத்திற்கு திடீரென வந்திருந்த காவல்துறையினர் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் முரண்பட்டிருந்தனர். குறிப்பாக ஒலிபெருக்கிகளை பாவிக்க முடியாது என்றும், ஒலிபெருக்கிகளை அகற்றுமாறும், காவல் நிலையத்திற்கு வந்து ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி பெறுமாறும் கூறியிருந்தனர். இதன்போது தாம் பல்கலைக்கழகத்திற்குள்ளே தான் ஒலிபெருக்கி பாவிப்பதாகவும், இதற்கான அனுமதி எடுக்க வேண்டுமாயின் உடன் அனுமதி தருவீர்களா என காவல்துறையினரிடம் போராட்டத்தில்

தொடர்ச்சி: பக்கம் 09

## கொக்குத்தொடுவாய் சட்டவிரோத உப்பளப் பணிகளை நிறுத்தத் தீர்மானம்



முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத் தொடுவாய் மத்தி, குஞ்சுக் கால் வெளி பகுதியில் தனியார் மற்றும் அரச காணிகளை ஆக்கிரமித்து முன்னெடுக் கப்படும் சட்டவிரோத உப்பள அமைக்கும் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் வலியுறுத் தலையடுத்து, கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. நில அளவைத் திணைக்களத்தின் சுவட்டு வரைபடத்தின் அடிப்படையில், குறித்த பகுதி கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டது என

தொடர்ச்சி: பக்கம் 14

## மட்டக்களப்பு காணி விடுவிப்பில் வனவளத் திணைக்களம் பாரபட்சம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் அன்றாட தேவைகளுக்கும் பயன் பாட்டுக்கும் காணிகளை விடுவிப்பதில் வன வளத் திணைக்களம் தொடர்ச்சியாகவே தடைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், வவுனியா மாவட்டத்தில் கிவுல் ஓயா திட்ட த்துக்கு வனவளத் திணைக் களத்துக்குச் சொந்தமான 12 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில் வனவளத் திணைக்களம் மக்களின் பயன்பாட்டுக்கான காணி களை விடுவிக்கும் போது ஏன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் காணிகளை விடுவிப்பதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுகிறது. வனவளத் திணைக்களத்தின் செயற் பாடுகள் முற்றிலும் பாரபட்சமானது. தமிழ் பிரதேசங்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக் கப்படுகிறது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவரும்,

தொடர்ச்சி: பக்கம் 10

# மத்திய தரைக்கடலில் உள்ள வர்த்தகக் கப்பல்களில் இருந்து ஐரோப்பா மீது தாக்குதலா?



மத்திய தரைக்கடலில் உள்ள வர்த்தகக் கப்பல்களில் இருந்து ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் இத்தாலி மீது ரஷ்யா ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சாத்தியமான நடவடிக்கை குறித்து அமெரிக்க அமைப்புகள் ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நடவடிக்கையின்படி, ரஷ்ய ஆளில்லா விமானங்கள் சரக்குக் கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டு, கடற்கரையிலிருந்து சுமார் 125 முதல் 190 மைல்கள் தொலைவில் உள்ள சர்வதேச கடல் பகுதியில் இருந்து ஏவப்படும்.

இந்த ஆளில்லா விமானங்கள், தீயை மூட்டுவதற்கும், உபகரணங்களைச் சேதப்படுத்துவதற்கும் அல்லது ஒரு துறைமுகம் அல்லது விமான நிலையத்தைத் தற்காலிகமாக முடக்குவதற்கும் போதுமான அளவு ஆயுதங்களைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட இலக்குகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. பிரான்ஸ் இதைத் தீவிரமாக எடுத்துக்கொள்வதாகத் தெரிகிறது. மக்ரோன் செப்டம்பர் 16 அன்று தனது பாதுகாப்புக் குழுவைக் கூட்டினார், பின்னர் 2 நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு அரசியல் கட்சியின் தலைவர்களையும் எலிசே மாளிகைக்கு அழைத்தார்.

உக்ரைனுக்கு ஆயுதம் வழங்கும் நாடுகள் மீதான ரஷ்யத் தாக்குதல்கள் குறித்த எச்சரிக்கையைப்

தொடர்ச்சி: பக்கம் 14

## ‘இந்தியப் பெருங்கடலுக்கு அப்பால் போரை விரிவுபடுத்துவோம்’ – ஈரான்



மீண்டும் தாக்கப்பட்டால் ‘இந்தியப் பெருங்கடல் மற்றும் அதற்கு அப்பாலும்’ போரை விரிவுபடுத்துவோம் என ஈரான் மிரட்டல் விடுத்துள்ளது. அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ மீண்டும் தாக்குதல் நடத்தினால், போரை இந்தியப் பெருங்கடல் பகுதி வரை ஈரான் விரிவுபடுத்தக்கூடும் என்று ஈரானின் உயரிய தலைவர் அயதுல்லா அலி கமேனியின் ஆலோசகர் எச்சரித்துள்ளார்.

ஈரானின் அரை-அரசு செய்தி நிறுவனமான ‘ஃபார்ஸ்’ (Fars) வெளியிட்ட காணொளி ஒன்றில் மேஜர் ஜெனரல் யஹ்யா ரஹீம் சஃபவி இந்த எச்சரிக்கையை கடந்த வியாழக்கிழமை (24) விடுத்தார். “பாரசீக வளைகுடா மற்றும் ஹார்முஸ் நீரிணைப் பகுதிகளிலிருந்து செங்கடல் பகுதி வரை மோதல் பரவியுள்ள நிலையில், மேலும் போர் நடவடிக்கைகள் தொடர்ந்தால், இந்தப் போர் முனையானது இந்தியப் பெருங்கடல் மற்றும் அதற்கும் அப்பால் உள்ள பகுதிகளுக்கும் விரிவடைய வாய்ப்புள்ளது,” என்று சஃபவி கூறினார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தரப்பிலிருந்து மீண்டும் தாக்குதல்கள் தொடங்கி னால் ஏற்படக்கூடிய மிக மோசமான சூழலை எதிர்கொள்ள ஈரான் ராணுவம் திட்டங்களை வகுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்; அதேவேளையில், செங்கடல் கடற்கரைப் பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ள ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்களை அவர் பாராட்டினார்.

“தங்கள் நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டை எந்த வகையிலும் மீற முயன்ற ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராக ஏமன் மக்கள் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக உறுதியாக நின்று போராடி வந்துள்ளனர்,” என்று அவர் கூறினார். “அமெரிக்கர்கள் ஒரு

தொடர்ச்சி: பக்கம் 14

## ஜெர்மனியின் பொருளாதார இயந்திரம் தள்ளாடுகிறது



மெர்சிடிஸ் நிறுவனம் ஜெர்மனியில் தொழிலாளர் செலவுகளை €800 மில்லியனாகக் குறைக்க விரும்புகிறது, மேலும் தொழிலாளர்கள் இதற்கு உடன்பட வில்லை என்றால், 2 தொழிற்சாலைகள் மூடப்படும்.

ஒவ்வொரு ஜெர்மன் ஆலையை யும் தக்கவைப்பதே தற்போதைய இலக்கு என்று உற்பத்தித் தலைவர் மைக்கேல் ஷீபே கூறுகிறார், ஆனால் செலவுப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால், 1 அசெம்பிளி ஆலையும் 1 பவர்டிரெய்ன் ஆலையும் மூடப்படும். எந்த ஆலையின் பெயரும் குறிப்பிடப்படவில்லை, எனவே ஒவ்வொரு ஜெர்மன் தொழிற் சாலையும் பரிசீலனையில் உள்ளது.

முக்கிய முன்மொழிவு, வாரத்திற்கு 40 மணிநேர வேலைக்கு 35 மணிநேர ஊதியம் வழங்குவதாகும், மேலும் விடுமுறை மற்றும் கிறிஸ்துமஸ் போனஸ்களும் நிராகரிக் கப்படும் என்று கூறப்படுகிறது. தொழிற்சங்கம் இதை ஒரு சிவப்புக் கோடு

தொடர்ச்சி: பக்கம் 14

## சமூக ஊடகங்களைவிட செயற்கை நுண்ணறிவு (AI) குழந்தைகளுக்கு அதிக ஆபத்து



சமூக ஊடகங்களை விட செயற்கை நுண்ணறிவு குழந்தைகளுக்கு அதிக ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடும் என்றும், தொழில்நுட்ப நிறுவனங்கள் போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள் ளத் தவறிவிட்டன என்றும் கூகிளின் முன் னாள் பாதுகாப்பு நிர்வாகி ஒருவர் கடந்த வியாழக்கிழமை (24) எச்சரித்துள்ளார்.

கூகிளின் நம்பிக்கை மற்றும் பாது காப்புக் குழுவை நிறுவி, அந்நிறுவனத்தில் 15 ஆண்டுகள் பணியாற்றிய டாம் சீகல், சமூக ஊடகங்களின் எழுச்சியின் போது செய்யப்பட்ட தவறுகளை இந்தத் துறை மீண்டும் செய்து வருகிறது என்று இந்த வாரம் ராய்ட்டர்ஸிடம் கூறினார்.

“செயற்கை நுண்ணறிவு குழந்தைகளுக்கு என்ன செய்கிறது என்பதைப் பொறுத்தவரை, நாம் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கிறோம்,” என்று சீகல் கூறினார். “வெளி உதவியின்றி இந்தத் துறை தானாகவே இதைக் கண்டுபிடித்துவிடும் என்ற எண்ணம் யதார்த்தமற்றது.”

தொடர்ச்சி: பக்கம் 14

## ஆசிரியர் தலையங்கம் | 26 செப்ரெம்பர், 2026

## திலீபனின் வரலாறு உலக மக்கள் மயப்படுத்தப்படுவது ஈழத்தமிழர் இறைமையை பன்முனைவாக்க உலகில் பேண உதவும்

தியாக தீபம் திலீபனின் 39வது ஆண்டு நினைவேந்தலை ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகளவில் உலகெங்கும் முன்னெடுக்கின்ற இன்றைய நாளில் (26.09.26), இலக்கு ஆசிரியர் குழுவினரும் ஈழத்தமிழர்களுடன் இணைந்து வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றார்கள்.

அறவழிப் போராட்ட அரசியலை முன்னெடுத்தவர்களெனக் காந்தியையும் நெல்சன் மண்டேலாவையும் கொண்டாடும் உலகம், தியாக தீபம் திலீபனுக்கு 39 ஆண்டுகளாக அத்தகைய மதிப்பளிப்பைச் செய்யாதிருப்பதற்கு என்ன காரணம்?

முக்கிய காரணம், ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் அனைத்துலகிலும் தியாக தீபம் திலீபனின் வரலாற்றை உலக மக்களுக்கோ, உலக நாடுகளின் அரசாங்கங்களுக்கோ, ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்களுக்கோ, உலக வரலாற்றின் ஒரு அங்கமாகத் தெரியப்படுத்துவதில் சரியான முறையில் செயற்படவில்லை என்பதுதான் பதிலாக உள்ளது.

இதனை மாற்றியமைப்பதற்கு, தியாக தீபம் திலீபனின் வரலாறு உலகத் தமிழர்களால் உலகின் முக்கிய மொழிகளில் வெளியிடப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஜென்சி இளையவர்களும் உலகத்தினரும் அவரது ஈடிணையில்லாத தியாகத் தன்மையைப் புரிந்து, அவருக்குரிய மதிப்பினை வழங்குவர்.

வரலாறு என்ற வகையில், இதற்கான மூல நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது வரலாற்றுத் துறை வழியாகவோ அல்லது அரசியல் அறிவியல் துறை வழியாகவோ சான்றாதாரங்களுடன் வெளியிட்டு, அதனை உலக மக்கள் மயப்படுத்த, 40வது ஆண்டை நோக்கித் திலீபனின் நினைவேந்தல் பயணிக்கத் தொடங்கியுள்ள 2026–27 காலப்பகுதியில் உலக மக்களிடையே நிலைப்படுத்த முயற்சிக்க வேண்டும் என்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

இளநிலை, முதுநிலை வரலாற்று, அரசறிவியல் பட்டப்படிப்புகளிலும், முனைவர் பட்ட ஆய்விலும் மாணவர்களைத் திலீபன் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள இடமளிக்க வேண்டும். புலம்பெயர் தமிழர்கள் இதற்கான நிதித் துணையினை வழங்க வேண்டும்.

தனியாட்கள், அமைப்புக்கள் செய்யும் வரலாற்று ஆய்வுகளை விடப் பல்கலைக்கழக வழியான ஆய்வுகளின் முடிவுகளே உலக மட்டத்தில் ஏற்புடையனவாக ஏற்கப்படும் என்பதாலேயே, எமது பல்கலைக்கழகங்கள் தமது பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

மேலும், தனிநிலையில், அமைப்பு நிலையில் 2023 முதல் திலீபனின் பயணத்தை ஆவணப்படுத்தும் ஆவணக்காப்பகம் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரிய விடயம். நல்லூரில் திலீபனின் வரலாறு குறித்த கண்காட்சியை நடத்தும் இவ்வமைப்பு, இங்கிலாந்தின் குரோலி மற்றும் லிவர்பூல் ஆகிய நகரங்களிலும், பிரான்சில் பாரிசிலும், தேசங்கடந்துறை ஈழத்தமிழருடன் இணைந்து கண்காட்சிகளை விரிவாக்கி வருகின்றனர்.

உலக ஈழத்தமிழினமாக விளங்கும் ஒவ்வொருவரும் இவர்களுடன் தொடர்புகொண்டு, தியாக தீபம் திலீபனின் வரலாற்றை ஈழத்தமிழரின் இளையவர்கள் மட்டுமல்ல, உலகின் இளையவர்களும் அறிய உதவ வேண்டும் என்பது இலக்கின் பணிவன்பான வேண்டுகோளாகவுள்ளது.

பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தினர் மற்றும் தென்னாபிரிக்க விடுதலை இயக்கத்தினர் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று, மாணவர்கள் கூடும் பகுதிகளில் சிறிய காட்சிப் பீடமமைத்து, அதில் நூல்களை, ஒளி-ஒலி நாடாக்களை வைத்து, மாணவர்களுக்குத் தங்கள் வரலாற்றைக் காட்சிப்படுத்தி, அது குறித்துத் தங்களுடன் பேச வருபவர்களுக்கு விபரமாக விளக்கமளித்து, இளையவர்களிடையே உலகெங்கும் தங்கள் உண்மை நிலையைத் தெளிவாக்கினார்கள்.

இதனை முன்மாதிரியாகக் கொண்டு, நல்லூரில் தொடங்கப்பெற்ற திலீபனின் வரலாற்றை வெளிப்படுத்தும் பணியை உலகப் பல்கலைக்கழகங்களுக்கும், அங்குள்ள தமிழ்ச் சங்கங்கள் மற்றும் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களுக்கும் நீட்சி பெறச் செய்ய வேண்டும்.

அதேபோல கிறிஸ்தவ ஆலயங்களில், சபைகளில் வழிபாடுகள் முடியும் நேரத்தில் நாட்டின் மூத்த குடிகள், வயதை அடைந்த, அதாவது 65 வயதுக்கு மேற்பட்டவர்களைச் சந்தித்து உரையாடி, தங்களுக்கான ஆதரவைப் பலப்படுத்தினர். இவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்க விரும்புகையில், தெருக்கரைப் பரப்புரைகளை, சந்தைகள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களில் காட்சிப் பீடங்களை அமைத்து, தங்கள் கருத்துக்களை உலகறியச் செய்தனர். ஈழத்தமிழர்கள் தங்கள் கோயில்கள் வழியாக இத்தகைய முறையில் திலீபனின் வரலாற்றை மக்கள் மயப்படுத்தலாம். தமிழ் வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்த உதவலாம்.

இத்தகைய ஏற்புடைய முயற்சிகள் வருடம் முழுவதற்கும் திட்டமிடப்பட்டு, ஒரு நினைவேந்தல் நாளில் இருந்து அடுத்த ஆண்டு நினைவேந்தல் நாள் வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டாலே குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் முயற்சிக்குத் தகுந்த பலனைத் தரும்.

இன்று செயற்கை நுண்ணறிவு வழியாகவே இளையவர்கள் தங்களுக்கான அறிவுத் தேடல்களைக்கூட நடத்துவதால், சரியான வரலாற்றுத் தரவுகள், தகவல்கள் செயற்கை நுண்ணறிவுப் பதிவுகளாக உழைக்க வேண்டியவர்களாக உலக இனமாகத் திகழும் ஈழத்தமிழர்கள் உள்ளனர்.

இவைதான் மக்கள் போராட்டத்திற்கான முதற்படி. இந்த அடித்தளம் எவ்வளவு உறுதியாக அமைக்கப்படுகிறதோ, அந்த அளவுக்குத்தான் அழுத்தக் குழுக்களாக இவை மாறி, அரசியல்வாதிகள் தியாக தீபம் திலீபனைக் குறித்து பேச, எழுதத் தொடங்குவார்கள்.

திலீபனின் வரலாறு மட்டுமல்ல, ஈழத்தமிழர்களின் வரலாற்று நிகழ்வுகளும் உலக மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, பிரித்தானியக் காலனித்துவ அரசால் 21 செப்டெம்பர் 1833 இல் கோல்புறூக்-கமரோன் அரசியல் சீர்திருத்தம் இலங்கைத் தீவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஈழத்தமிழர்களின் யாழ்ப்பாண, வன்னி அரசுகளின் இறைமைகள் கண்டி சிங்கள அரசின் இறைமைக்குள் உள்வாங்கப்பட்டது. இதன் விளைவாக, இலங்கைத்தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையைக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் தங்களுடைய இறைமையின் அடிப்படையில் தங்களின் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தித் தங்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தங்களின் அடிப்படை மனித உரிமையான தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி வாழ இயலாத உலகின் மூத்த குடிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழரின் இறைமை பிரித்தானியக் காலனித்துவப் பேரரசால் ஒடுக்கப்பட்டு 193வது ஆண்டு நிறைவுக்கு வரும் 21 செப்டெம்பர் 2026 இலாவது, ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினை (Tamil Nation Question) தங்கள் இறைமையைப் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியிலிருந்து மீள்நிறுவுதல் என்பதே என்ற உண்மையை ஈழத்தமிழ் அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைமையான மனு மூலம் தெரிவித்து, காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக 04.02.1948 முதல் இன்று வரை 78 ஆண்டுகளாகத் தொடரும் இந்த உலகப் பிரச்சினைக்கு ஈழத்தமிழர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் உலக நாடுகள் உரிய தீர்வை வழங்க வேண்டும் எனக் கோர முயற்சிக்க வேண்டும்.

மேலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், இந்த ஈழத்தமிழர் இறைமையை மீள்நிறுவுவதற்கான முயற்சியில் 29.10.1944 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசை நிறுவியது முதல் இன்று வரை 81 ஆண்டுகள் தொடர்ந்து முயற்சித்து வரும் ஈழத்தமிழரின் முதன்மை அரசியல் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவரும், யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்றப் பிரதிநிதியுமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் 2023ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைத்த, ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்குத் தகுந்த தீர்வு காணும் வரை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையை மீளவும் வலியுறுத்த வேண்டிய நேரமிது.

இந்தத் தேவைகளின் அடிப்படையில், பிரித்தானியக் குடிகளாகவுள்ள, பிரித்தானியாவில் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள், பலஸ்தீனியர்களின் பிரச்சினையில் நியாயமான தீர்வை முன்னெடுக்க முயற்சிக்கும் பிரித்தானியாவின் இன்றைய பிரதமர் அன்ரி பேர்ணம் அவர்களிடம், ஈழத்தமிழர்களின் இறைமையையும் வெளியகத் தன்னாட்சி உரிமையையும், அதனை 1796 இல் கையகப்படுத்திய பிரித்தானிய அரசின் இன்றைய பிரதமர் என்ற வகையில் மீள்உறுதி செய்யும்படி கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கம் தான் 1833 இல் செயற்கையாக உருவாக்கிய சிலோன் என்னும் இலங்கைத்தீவின் அரசாங்கத்துக்குச் சுதந்திரம் வழங்குவதற்காக, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 29.10.1944 இல் அமைக்கப்பட்ட 15 நாட்களுக்கு இடையிலேயே சோல்பரி ஆணைக்குழுவை நியமித்தது.

இந்த ஆணைக்குழு ஈழத்தமிழர் இருப்புக்கும் இறைமைக்கும் எதிரான விதந்துரைப்புகளைச் செய்ததை அடுத்து, 03.11.1945 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவரும் சட்டமேதையுமான அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களால் ஈழத்தமிழர் இருப்பும் இறைமையும் பாதுகாக்கப்படவில்லை என்ற எதிர்ப்பு பிரித்தானிய அரசாங்கத்திற்கு விரிவாக அறிக்கை மூலம் கவனப்படுத்தப்பட்டது.

அதற்கு அடுத்த ஆண்டு ஜனவரியிலேயே, 15.01.1946 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி எஸ். சுப்பிரமணியம் அவர்களால் லேபர் கட்சியின் பிரதமர் அட்லி அவர்களிடம் சிறுதேச இனமான ஈழத்தமிழரின் தன்னாட்சிக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இவற்றை அன்றைய லேபர் கட்சித் தலைமை கவனத்தில் எடுக்காததே இன்றைய ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை என்பதனை விளக்கி, ஏற்புடைய தீர்வை ஈழத்தமிழர் பெற உதவுமாறு பிரித்தானிய பிரதமர் அன்ரி பேணம் அவர்களிடம் கோரிக்கை எழுப்ப வேண்டுமென்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

## தேயிலைத் தோட்டங்கள் காடாவதால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்



நுவரெலியா - லிந்துலை லெந்தோமஸ் தோட்டப் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான மேலும் 4 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தேயிலைத் தோட்டத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

உயிரிழந்தவர் லிந்துலை லெந்தோமஸ் பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய ஆண் ஒருவர் என தெரியவந்துள்ளது. மேலும் குளவிக் கொட்டுக்கு இலக்கான 4 தொழிலாளர்கள் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் வட்டவளை பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள பின் ஓயா தோட்டத்தில் தேயிலை பறிக்கும் போது, தேயிலைச் செடிகளுக்குள் இருந்த குளவி கூடு கலைந்ததைத் தொடர்ந்து பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தேயிலை மலையில் உள்ள மரம் ஒன்றில் இருந்த குளவி கூடு கலைந்து வந்து தொழிலாளர்களைத் தாக்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர். மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுதல் மற்றும் பாம்பு தீண்டுதல் உள்ளிட்ட சவால்களைத் தொடர்ச்சியாக எதிர் நோக்கி வருகின்றனர்.

தேயிலைத் தோட்டங்கள் உரிய பராமரிப்பின்றி காடுகளாக மாறியுள்ளதன் விளைவாக தாங்கள் இவ்வாறான பாரிய சவால்களை எதிர்கொள்வதாகத் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## அனோஜன் விடுதலை பெறுவாரா? காத்திருக்கும் உலகத் தமிழினம்



சவூதி அரேபியாவில் மரண தண்டனையை எதிர்கொண்டுள்ள இலங்கைத் தமிழரான 26 வயதுடைய சிவராசா அனோஜனை விடுவிப்பதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ள நிலையில், அவரது குடும்பத்தினரும் உலகத் தமிழர்களும் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

அனோஜனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் இலங்கை அரசாங்கம் சவூதி அதிகாரிகளுடன் இராஜதந்திர ரீதியில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. செப்டெம்பர் 21ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அனோஜனின் பெற்றோரைச் சந்தித்து, அவரது விடுதலைக்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். மேலும், சவூதி மன்னரிடம் மன்னிப்புக் கோரும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட அரசியல் தரப்புகள் சவூதி அரேபியாவுடன் இராஜதந்திர ரீதியான தலையீட்டை வலியுறுத்தி வருகின்றன. இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தூதரகங்களுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

அனோஜனின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணம், அம்பாறை உள்ளிட்ட பகுதிகளில் போராட்டங்கள், கையெழுத்துப் பிரசாரங்கள், மெழுகுவர்த்தி ஏந்திய போராட்டங்கள் மற்றும் மதப் பிரார்த்தனைகளும் இடம்பெற்று வருகின்றன.

விடுதலைக்கான இறுதி முடிவு சவூதி அதிகாரிகளிடமே உள்ள நிலையில், இலங்கை அரசின் இராஜதந்திர முயற்சிகள் பலனளிக்குமா என்ற எதிர்பார்ப்புடன் உலகத் தமிழினம் காத்திருக்கிறது.



# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: நீதிக்கான நியாயமான எதிர்பார்ப்பு நீள்கிறது

விதுரன்

இலங்கை வரலாற்றில் ஆறாத வடுவை ஏற்படுத்திய 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று 7 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அத் தாக்குதல்களுக்குச் சதித்திட்டம் தீட்டியமை மற்றும் உதவி ஒத்தாசை புரிந்தமை தொடர்பான மூன்றாவது வழக்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் குழாமினால் கடந்த 22ஆம் திகதியன்று வழங்கப்பட்டுள்ளது.



கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், கட்டுவாபிட்டி புனித செபஸ்தியர் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மற்றும் கொழும்பிலுள்ள சொகுசு ஹோட்டல்கள் உள்ளிட்ட 8 இடங்களில் நடத்தப்பட்ட கொடூர மான தற்கொலைத் தாக்குதல்களில் 263 பேர் கொல்லப் பட்டதுடன் 526 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 25 பிரதிவாதிகளுக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

நீதிபதி நவரத்ன மாரசிங்க தலைமையில், நீதிபதி கள் சுஜீவ நிசங்க மற்றும் இராமநாதன் கண்ணன் ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய அமர்வு, சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக 547 நாட்கள் நாளாந்த அடிப்படையில் 2,300க்கும் மேற்பட்ட சாட்சியங்களை விசாரித்து இத்தீர்ப்பை வழங்கி யுள்ளது.

வழக்கு விசாரணைகளின் போது ஒரு பிரதிவாதி விளக்கமறியலில் மரணமடைந்த நிலையில், எஞ்சிய 24 பேரில் 15 பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களுக்கு 200 முதல் 260 ஆண்டுகள் வரை கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், அவர்களின் சொத்துக்களும் அரசு டமையாக்க உத்தரவிடப்பட்டது.



குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப் பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் 9 பேர் வழக்கில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டனர்.

நௌஃபர் மௌலவி, கஃபூர் மாமா, மில்ஹான், சாதிக் அப்துல்லா போன்ற பிரதான எதிரிகளுக்கு வழங்கப் பட்ட இத்தண்டனை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவுக்கு ஆறுதலை அளித்திருந்தாலும், இதனுடன் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான சட்டப் போராட்டமும் நீதிக்கான தேடலும் முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருத முடியாது.

ஏனெனில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது வெறும் 8 இடங்களில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகளுடன் மட்டும் முடிந்துவிட்ட சம்பவமல்ல. இது பல கிளை சம்பவங் களையும், நூற்றுக்கணக்கான வழக்குகளையும் கொண்ட பரந்த பின்னணியைக் கொண்டதாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலு வலகத்தின் அறிக்கையின்படி, இத்தாக்குதல்களை அடிப் படையாகக் கொண்டு நாடு முழுவதிலும் 40க்கும் மேற்பட்ட குற்றவியல் வழக்குகளும், 280க்கும் மேற்பட்ட சிவில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய தீர்ப்பு என்பது தாக்குதலுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி புரிந்த ஒரு பகுதி யினருக்கான தண்டனை மட்டுமே தவிர, இத்தாக்குத லின் பின்னணியிலிருந்த முழுமையான சதித்திட்டம் மற்றும் அதன் உண்மையான சூத்திரதாரிகள் தொடர்பான விசார ணைகள் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.



குறிப்பாக, இத்தாக்குதல் வெறுமனே ஒரு தீவி ரவாதக் குழுவினால் மட்டும் முன்னெடுக்கப்பட்ட ஒன்றல்ல, மாறாக அக்குழுவைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட ஒரு அரசியல் மற்றும் மூலோபாயச் சதித்திட்டம் என்ற சந்தேகத் தின் அடிப்படையிலேயே தற்போதைய விசாரணைகள் நகர்கின்றன.



இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒரு பகுதியினர் இச்சதித்திட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவரான மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மறுபுறத்தில், இத்தாக்குதலின் பின்னணியிலிருந்த அரசியல் ரீதியான சதித்திட்டம் தொடர்பான விசாரணைகள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மையப் படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக அவர் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் நீதிமன்றத்தை நாடியுள்ளதுடன், அவருக்கு வெளிநாடு செல்வதற்கும் நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் அத னைத் தடுக்கத் தவறி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிய பாதுகாப்பு மற்றும் நிர்வாகத் துறை உயர் அதிகாரிகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளில் அவர்கள் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தாக்குதலைத் தடுக்கத் தவறியதன் மூலம் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய தாக பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் கத்தோலிக்க திருச் சபையால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவையும், பூஜித் ஜயசுந்தர மற்றும் நிலந்த ஜயவர்த்தன தலா 75 மில்லியன் ரூபாவையும் இழப்பீடாக வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனவே, தாக்குதலில் நேரடியாகப் பங்கேற்ற பிரதிவாதிகளுக்கான வழக்கு முடிவுக்கு வந்திருந்தாலும், அரசியல் மற்றும் அதிகார மையங்களை மையமாகக் கொண்ட ஏனைய வழக்குகள் இன்னும் ஆரம்பக் கட்டத்தி லேயே நிலுவையில் உள்ளன.

இவ்வாறான நிலுவையில் உள்ள வழக்குகள் முழுமையாக விசாரிக்கப்பட்டு இறுதித் தீர்ப்பு வர இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம். அரச மற்றும் பாதுகாப்புத் தரப் பினரின் அலட்சியங்களும் கவனயீனங்களும் இத்தாக்கு தல் நடப்பதற்குச் சாதகமாக அமைந்திருந்தாலும், இச்சதித் திட்டத்தில் இன்னும் அவிழ்க்கப்படாத பல முடிச்சுகள் அப்படியே நீடிக்கின்றன.



பிரதான சூத்திரதாரியாக இருந்து காய்களை நகர்த்தியவர் யார் என்பதைக் கண்டறிவதே ஒட்டுமொத்த விசாரணைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும்.

இருப்பினும், உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிவதற்கான விசாரணைகள் எந்தளவுக்கு நேர் மையாகவும் பக்கச்சார்பின்றியும் முன்னெடுக்கப்படும் என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியிலும் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தின் மத்தியிலும் இன்னமும் நீடிக்கிறது.

ஏனெனில், இந்த விசாரணை வளையத்திற்குள் அதிகாரம் படைத்த அரசியல் தரப்புகளும், சக்திவாய்ந்த படைத்துறை அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளனர். இவ் வாறான பின்னணியில், உண்மைகள் வெளிவருவதைத் தடுக்க முற்படும் சுயநலச் சக்திகளின் தடைகளைத் தாண்டி, முழுமையான புலனாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு உண் மைகள் வெளிக்கொண்டு வரப்படுமா என்பது பெரிய வினாக்குறியாகவே உள்ளது.

கொழும்பு பேராயர் இல்லத்தின் கருத்துப்படி, நீதிமன்றம் தற்போது வழங்கியுள்ள தீர்ப்பு பாதிக்கப்பட்ட

தொடர்ச்சி: பக்கம் 14




**பா.அரியநேத்திரன்**

சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்ட நற்பிட்டிமுனை இளைஞர் சிவராசா அனோஜனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும், தனது மகனைக் காப்பாற்றுங்கள் என அனோஜனின் தாயார் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வெளிவிவகார அமைச்சர் மற்றும் சவூதி அரேபியத் தூதரகம் எனப் பலதரப்பட்ட பிரமுகர்களைச் சந்தித்து, கண்ணீருடன் உண்மைகளைத் தெரிவித்துள்ளார்.



இந்நிலையில், கடந்த (22/09/2026) பாராளுமன்ற அமர்வில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், சவூதியில் தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட சிவராசா அனோஜனின் விடுதலைக்காக இலங்கை அரசாங்கம் முழுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகக் கூறியிருந்தார்.

இதற்காக சாதகமான பதில்கள் அந்தத் தாய்க்கும் அவருடைய குடும்பத்திற்கும், சம்பந்தப்பட்டவர்கள் அனைவராலும் வழங்கப்பட்டு, அதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைவிட, தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைவர்கள், சமயப் பெரியார்கள், பொது அமைப்புகள் என இலங்கையில் உள்ள அனேகமானவர்கள் சிவராசா அனோஜனின் விடுதலைக்காக, ஒரே குரலில் “நாம் இலங்கையர்” என்ற மனநிலையில், ஏகோபித்த குரல்கள் மூலமாக சவூதி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தவண்ணம் உள்ளனர்.

சமய வழிபாடுகள், கவனயீர்ப்புப் போராட்டங்கள் என இன, மதம் இன்றி பரவலாக வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

ஆனால் சில அரசியல் தலைவர்கள் தமது அரசியலுக்காகவும் அனோஜனின் விடயத்தைக் கையாள்வதும் உண்டு. எது எப்படியானாலும், ஒட்டுமொத்த இலங்கை மக்களின் கோரிக்கை, சவூதியில் மரண தண்டனை பெற்ற இளைஞன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற ஒரே கருத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

அனோஜன் இட்ட பதிவை அரபு மொழியில் காட்டிக்கொடுத்த முஸ்லிம் இளைஞர்களும் இப்படி மரண தண்டனை கிடைக்கும் என்று அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள்.

உண்மையில், சவூதியில் பணிக்காகத் தனது குடும்பக் கஷ்டத்தால் சென்ற ஒரு பொறியியல் துறைப் பட்டதாரி இளைஞனுக்கு இவ்வாறான மரண தண்டனை ஏன் ஏற்பட்டது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

கடந்த 2026, மே 28ஆம் திகதி, யாழ்ப்பாணம் தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்து கந்தன் ஆலயத்தை நோக்கி பாத யாத்திரை வழமைபோன்று இந்த வருடமும் ஆரம்பிக்கப்பட்டு, 2026, ஜூன் 04ஆம் திகதி முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் பாத யாத்திரை அடியார்கள் சென்றபோது, அந்தச் சுற்றுவட்டாரத்தில் நின்ற ஒரு நாய், அந்தப் பாத யாத்திரை ஒருவருடன் இணைந்து கொண்டது.

அவர் அந்த நாயைத் தம்முடன் அழைத்து வரும்போது, அந்த நாய்க்கு “சுப்பிரமணியம்” என்ற செல்லப்பெயரை அவருடன் கூட வந்தவர்கள் சூட்டினர். மனிதர்களுடன் அந்தச் சுப்பிரமணியம் என்ற நாயும் பாத யாத்திரைக் குழுவுடன் நடந்து செல்லும்போது, கல்முனை பிரதான வீதியில் கடைத்தெருவில் 21 வயதுடைய ஒரு முஸ்லிம் இளைஞர் 2026, ஜூன் 27ஆம் திகதி மாலை அந்த நாயைக் காலால் உதைத்துவிட்டார். அதனை ஒருவர் சமூக வலைத்தளத்தில் வீடியோ காட்சியாகப் பதிவேற்றியதால், இந்தச் சம்பவத்தை சமூக ஊடகங்களில் பலர் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

இது பின்னர் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பிரதம பரிசோதகருக்கு முறைப்பாடாகக் கிடைக்கப்பெற்றமையால், அந்த இளைஞன் கைது செய்யப்பட்டு, கல்முனை நீதிமன்றில் 50 ஆயிரம் தண்டப் பணம் அந்த இளைஞன் செய்த தவறுக்காகத் தண்டனையாக வழங்கப்பட்டது.



அந்தப் பாத யாத்திரீகர்களுடன் சென்ற சுப்பிரமணியம் என்ற நாய் 2026, ஜூலை 10ஆம் திகதி உகந்தைக் காட்டுப்பாதை வரை மட்டுமே சென்று, பின்னர் பாதுகாப்புத் தரப்பு அந்த நாயையும் அதனை அழைத்து வந்த நபரையும் கதிர்காமத் தலத்தில் விட்டனர்.

இந்த விடயம் அனேகமான சமூக ஊடகங்கள், முகநூல்களில் பதிவுகள், விமர்சனங்கள் பரவலாக வெளிவந்த நிலையில், சவூதியில் பணிபுரியும் நற்பிட்டி முனை சிவராசா அனோஜன் என்பவர் யாரோ ஒருவரின் முகநூலில் இட்ட பதிவிற்கு தனது கருத்தைப் பதிவிட்டார். “அந்தக் கருத்து இஸ்லாம் மதக் கடவுளை அவமதிக்கும் பதிவாக இருந்தது.” அதனைப் பின்னர் ஐந்து மணித்தியாலங்களுக்குப் பிறகு, அவர் இட்ட பதிவு தவறு என்பதைத் தானே உணர்ந்து, அதனை நீக்கியது மட்டுமன்றி, தான் செய்த தவறுக்காகப் பகிரங்கமாகத் தனது முகநூலில் மன்னிப்புக் கேட்டும் பதிவிட்டார்.

ஆனால், அதனைப் பொருட்படுத்தாத சிலர், அவர் இட்ட பதிவை முகநூலில் பிரதியெடுத்து, அவரது தமிழ் வார்த்தைகளை அரபு மொழியில் மொழிபெயர்த்து சவூதி நாட்டுக்கு அனுப்பிவிட்டது மட்டுமன்றி, தொடர் அழுத்தங்களையும் தெரிவித்தனர்.

இதன் காரணமாகவே, சவூதியின் அல்-அஹ்ஸா குற்றவியல் நீதிமன்றம் அனோஜனின் அந்த முகநூல் பதிவுக்காக அவருக்கு 2026, ஜூலை 15ஆம் திகதி 05 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், 03 மில்லியன் சவூதி ரியால் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்நிலையில், இந்தத் தண்டனையைக் குறைக்கக் கோரி தூதரகத்தினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி மேல் முறையீடு செய்திருந்தபோதிலும், மறுபுறம் பொது வழக்கறிஞர் அலுவலகம், சிவராசா அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை போதுமானதாக இல்லை என்றும், ஷரியா சட்டத்தின் கீழ் இதைவிடக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் சவூதி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். அதனைப் பரிசீலித்த சவூதி நீதிமன்றம், தண்டனையைக் குறைக்காமல், ஷரியா சட்டம் மூலம் 2026 செப்டம்பர் 17ஆம் திகதி மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதுதான் அனோஜனின் சுருக்க வரலாறு. இப்போது அவருக்கு மனிதாபிமான மன்னிப்பு வழங்கி, தன்னை அறியாமல் இட்ட பதிவுக்குத் தானே உடனடியாக மன்னிப்புக் கேட்ட விடயத்தை உணர்ந்து, அவருடைய குடும்ப நிலைமைகளைக் கருத்தில்கொண்டு, இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதே முழு இலங்கை மக்களின் ஏகோபித்த கோரிக்கையாக உள்ளது.

உண்மையில், அனோஜன் எந்தக் கொலைக் குற்றமோ, அந்த நாட்டில் தகாத எந்த நடவடிக்கைகளோ செய்யவில்லை. யாரோ ஒருவர் அவருடைய முகநூலில் இட்ட பதிவுக்குக் கீழ் தமது கருத்தைத் தவறாகப் பதிவிட்டு, அந்தத் தவறை உணர்ந்து அவராகவே அதனை நீக்கி, சவூதி மன்னருக்கும் மக்களுக்கும் அனைத்து இஸ்லாமிய மக்களிடமும் மன்னிப்பும் கேட்டுள்ளார்.

மன்னிப்பு என்பது சகல மதங்களுக்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு உயர்ந்த செயல். “நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குக் கொடுமை செய்த மக்காவாசிகளை, அவர்கள் மீது வெற்றி பெற்ற போதிலும், பழிவாங்காமல் ஒட்டுமொத்தமாக மன்னித்தார்கள். இது இஸ்லாமிய வரலாற்றில் மன்னிப்புக்கு மிகச்சிறந்த உதாரணமாகும்.”



நாம் ஒரு மனிதருக்குத் தீங்கு செய்திருந்தால், அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பதற்கு முன், பாதிக்கப்பட்ட அந்த மனிதரிடம் நேரடியாக மன்னிப்புப் பெற வேண்டும் என்பது இஸ்லாத்தின் முக்கிய விதியாகும்.

மன்னிப்பு என்பது பலவீனத்தின் அடையாளம் அல்ல; அது மன வலிமையின் மற்றும் இறைபக்தியின் அடையாளம் என்கிறது இஸ்லாம்.

ஆகவே, இலங்கையில் இருந்து தமது குடும்ப வறுமை காரணமாக சவூதியில் பணிபுரியச் சென்ற நற்பிட்டிமுனை இளைஞன் சிவராசா அனோஜனுக்கு சவூதி அரசு மன்னிப்பு வழங்கி, அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்பதே இனம், மதம், மொழி கடந்த இலங்கையர்களின் வேண்டுதல்.

சிவராசா அனோஜன் சவூதி நாட்டில் மரண தண்டனை விடயம் தற்போது இலங்கையில் “நாம் இலங்கையர்” என்ற ஒரு எண்ணக்கருவை இந்த விடயத்திற்கு மட்டும் உருவாக்கியுள்ளது என்பது உண்மை.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு எந்த இடங்களில் இருந்தும் இனி பாத யாத்திரை செய்யும் இந்து சமய மக்கள், நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளை கதிர்காமத்திற்கோ அல்லது வேறு இடங்களுக்கோ நடைபவனியாக (பாத

தொடர்ச்சி: பக்கம் 13




தீபச்செல்வன்

ஈழத்தமிழர்களின்1990களின்வாழ்க்கையில்,வானத்தைப் பார்த்தாலே குழந்தைகள் அஞ்சிய ஒரு காலமாக அது நினைவில் நிற்கிறது. விமானங்களின் இரைச்சல் கேட்டால் பாடசாலைகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் பிள்ளைகள் ஓடினர். வயல்வெளி, சந்தை, ஆலயம், மருத்துவமனை, பாடசாலை என மக்கள் தஞ்சமடையும் இடங்கள்கூட அரசின் தாக்குதல்களுக்கு இலக்குகளாகின. குறிப்பாக, 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவிரமடைந்த இராணுவ நடவடிக்கைகளுடன் வான்வழித் தாக்குதல்களும் அதிகரித்தன. நாவலி தேவாலயத்தின் மீதான தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்ட சில மாதங்களுக்குள், நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மீது குண்டுகள் விழுந்தன. அத்தாக்குதல் தமிழ் மாணவர்களின் வாழ்விலும் வரலாற்றிலும் அழியாத காயமாகப் பதிந்துவிட்டது.



### அன்று என்ன நடந்தது?

1995 செப்டெம்பர் 22. நாகர்கோவில் மகா வித்தியாலயம் வழக்கம்போல இயங்கிக்கொண்டிருந்தது. மதிய நேரம். பாடசாலை வளாகத்தில் மாணவர்கள் இருந்தனர். வானில் இலங்கை விமானப்படையின் விமானங்கள் தென்பட்டன. விமானங்களின் அசைவைக் கண்ட மாணவர்கள் பதற்ற மடைந்தனர். சிலர் பாதுகாப்புக்காக மரத்தின் கீழ் பதுங்கினர். நண்பகல் சுமார் 12.45 மணியளவில் குண்டொன்று விழுந்து வெடித்ததில் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; பெருமளவானோர் காயமடைந்தனர். இதில் 26 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதாக முறையான ஆவணங்கள் பலவற்றில் பதிவாகியுள்ளன. மனித உரிமை ஆய்வுகளிலும் அந்தத் தாக்குதல் பள்ளி மாணவர்களை உள்ளடக்கிய பொதுமக்கள் உயிரிழப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட 26 மாணவர்கள் எங்கள் வரலாற்றில் இனப்படுகொலையின் சுவடுகளாகத் தரித்து நிற்கின்றனர். பத்து வயது, பதினொரு வயது, பன்னிரண்டு வயது, பதின்மூன்று வயது என சிறுவர்களும் சிறுமிகளும் அந்தப் பட்டியலில் இருந்தனர். ஆறு வயதுடைய சாந்தகுமார் என்ற குழந்தையும் கொல்லப்பட்ட மாணவர்களின் பட்டியலில் இடம்பெறுகிறார். சிறுவர்கள் போரின் அரசியலைத் தீர்மானிப்பவர்களுமல்ல, ஆயுதம் ஏந்தியவர்களுமல்ல; அவர்கள் படிப்பதற்காகப் பாடசாலைக்குச் சென்ற குழந்தைகள்.

### வானத்தைப் பார்த்து வாழ்ந்த ஒரு தலைமுறை

உலகமெங்கும் வானம் என்பது கனவுகளின் வெளியாக இருக்கிறது. ஆனால் ஈழக் குழந்தைகளின் வாழ்வில் அப்படியில்லை. 90களில் வடக்கு, கிழக்கின் பல கிராமங்களில் வானம் என்பது வெறும் இயற்கையின் வெளியல்ல. அது அச்சத்தைப் பொழியும் வெளி. விமானங் களின் இரைச்சல் கேட்டவுடன் குழந்தைகள் தாயின் மடியில் ஒளிந்துகொள்வதும், மக்கள் பதுங்குகுழிகளை நோக்கி ஓடுவதும், பாடசாலைகளில் வகுப்புகள் திடீரென நிறுத்தப் படுவதும்தான் அன்றைய அசாதாரண வாழ்க்கையாகியது.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அரச படைகள் பாரிய இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தபோது, விமானத் தாக்குதல்களும் கடுமையான எறிகணைத் தாக்குதல்களும் தொடர்ந்தன. ஜூலை 9ஆம் திகதி நாவலி புனித பேதுரு தேவாலயத்திலும் அருகிலிருந்த ஆலயத்திலும் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் மீதான வான்வழித் தாக்குதலில் குறைந்தது 65 பேர் கொல்லப்பட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. ஆனால் 147 பேர் இதில் படுகொலை செய்யப்பட்டதாக இலங்கைத் தமிழ் ஊடகங்கள் கூறுகின்றன.



நாவலியில் நடந்த கொடூரத்துக்குப் பின்னரும் வான்வழித் தாக்குதல்கள் இலங்கை அரசினால் நிறுத்தப்படவில்லை. செப்டெம்பர் 22ஆம் திகதி நாகர் கோவில் பாடசாலை தாக்கப்பட்டது. அதே நாளில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முந்தைய இரவே போர் தொடர்பான செய்திகளுக்கு அரசாங்கம் ஊடகத் தணிக்கையை அமுல்படுத்தியிருந்ததாக மனித உரிமை ஆவணங்கள் பதிவு செய்கின்றன. நாகர்கோவில் தாக்குதல் குறித்த செய்திகளும் அந்தத் தணிக்கையின் கீழ் சென்றன.

### போரால் சிதறிய கல்வி

ஒரு இனத்தின் மீது போர் நடத்தப்படும்போது முதலில் பாதிக்கப்படுவது அந்த மக்களின் இயல்பு வாழ்க்கை. அடுத்துப் பாதிக்கப்படுவது அவர்களின் கல்வி. பள்ளிகள் மூடப்படுவதும், ஆசிரியர்கள் இடம்பெயர்வதும், மாணவர்கள் தங்கள் புத்தகங்களை விட்டுவிட்டு ஓடுவதும், பரீட்சைகள் தடைபடுவதுமாக ஒரு தலைமுறையின் கல்விப் பயணம் இந்த இனவழிப்புப் போரினால் துண்டிக்கப்படுகிறது.



நாகர்கோவில் தாக்குதலில் 150 மாணவர்கள் காயமடைந் ததாக சர்வதேச ஆவணங்களில் பதிவாகியுள்ளது. அவர்களில் பலர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். பிரெஞ்சு மருத்துவ அமைப்பான எல்லைகளற்ற மருத்துவர்கள் (Médecins Sans Frontières – MSF) உடன் பணியாற்றிய மருத்துவர்கள், பருத்தித்துறை வைத்தியசாலையில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளித்ததுடன், பலருக்கு உறுப்புகளை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அப்போது பதிவு செய்தனர்.

### நீதியின்றித் தொடர்கிற காலம்

நாகர்கோவில் படுகொலை இடம்பெற்று மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகியும், அந்தப் படுகொலைக்கு நீதி இன்னமும் வழங்கப்படவில்லை. பாடசாலையில் உயிரிழந்த மாணவர்களின் பெயர்கள் இன்று நினைவேந்தல்களில் மாத்திரம் வாசிக்கப்படுகின்றன. இதுவே எல்லா நினைவேந்தல்களிலும் நிகழ்கிறது. அவர்களின் பெயர்களைச் சொல்லும் ஒவ்வொரு தருணமும், போரில் அழிக்கப்பட்ட ஒரு தலைமுறையின் சிறு பகுதியை மீண்டும் வரலாற்றுக்குள் கொண்டு வருகிறது. அத்துடன், இவ்வரலாறு போரின்போது ஸ்ரீலங்கா அரசு குழந்தைகள் மீது நிகழ்த்திய பாரிய இனவழிப்பை நினைவுபடுத்துகிறது.



இதேவேளை, பாடசாலைகள் பாதுகாப்பான இடங்களாக இருக்க வேண்டும் என்ற உலகளாவிய மனிதாபிமானக் கொள்கையை ஸ்ரீலங்கா அரசு மீறியமையும் அம்பலமாகிறது. இவற்றை அன்றைய நாட்களில் உலகம் தடுத்திருந்தால், பின்னாளில் செஞ்சோலைப் படுகொலை போன்ற படுகொலைகளைத் தடுத்திருக்க முடியும். தமிழ் மாணவர்கள் மீது ஸ்ரீலங்கா அரசு காலங்காலமாக இனவழிப்பை நிகழ்த்தி வருகிறது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கடந்த முப்பதாண்டுப் போரில் அழிக்கப்பட்டுள்ளனர்.

### தேசத்தை ஆள வேண்டிய பிள்ளைகள்

நாகர்கோவில் இனப்படுகொலையில் கொல்லப்பட்ட குழந்தை கள் இன்று உயிருடன் இருந்திருந்தால், அவர்களுக்கு முப்பதுகளையோ நாற்பதுகளையோ கடந்து வாழ்ந் திருப்பார்கள். சிலர் ஆசிரியர்களாகியிருப்பார்கள். சிலர் மருத்துவர்களாகியிருப்பார்கள். சிலர் விவசாயிகளாகவோ, எழுத்தாளர்களாகவோ, தொழிலாளர்களாகவோ, குடும்பத் தலைவர்களாகவோ இருந்திருப்பார்கள். போரில் குழந்தைகளும் சிறுவர்களும் கொல்லப்படுகையில், ஒரு தேசத்தின் ஆளுமை மிக்க மனித வளம் அழிக்கப்படுகிறது என்பதே உண்மை. அதுதான் போரின் மிகப் பெரிய அழிவுமாகும்.

அப்படிப் பார்க்கையில், எங்கள் தேசத்தில் இனவழிப்புப் போரால் அழிக்கப்பட்ட குழந்தைகள் இருந்திருக் கவில்லை என்றால், இன்று அவர்கள் எங்கள் தேசத்தில் வாழ்பவர்களாகவும் ஆள்பவர்களாகவும் இருந்திருப்பார்கள். இப்படுகொலையின் நினைவேந்தல் ஆண்டுதோறும் இடம்பெற்று வருகின்றது. அப்பிள்ளைகளின் படங்க ளைப் போராளிகள் அன்றைய காலத்தில் ஆவணப்படுத்தியுள் ளனர். உண்மையில், இத்தகைய அநீதிகள் எதிர்காலத்தில் மீண்டும் எவருக்கும் நிகழக்கூடாது என்பதற்காகவே ஈழத்


தொடர்ச்சி: பக்கம் 13




# வலுவாகத் தடம் பதிக்கும் அமெரிக்காவின் நகர்வு

கரிகாலன்

இந்தியப் பெருங்கடலின் மையத்தில் அமைந்துள்ள இலங்கையின் மூலோபாயப் புவிசார் அரசியல் முக்கியத்துவம், உலக வல்லரசுகளின் கவனத்தை எப்போதும் தன் பக்கம் ஈர்த்தே வந்துள்ளது.




சர்வதேச கடல்சார் வர்த்தகப் பாதைகளின் மையப் புள்ளியாகத் திகழும் இலங்கையில், தனது இராணுவ, பொருளாதார மற்றும் இராஜதந்திர ஆதிக்கத்தை வலுப்படுத்துவதில் அமெரிக்கா நீண்டகாலமாகத் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றது.

அண்மைக்காலமாக இலங்கையில் அமெரிக்கத் தூதரகத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான நகர்வுகள், புதிய உயர் அதிகாரிகளின் வருகை, பாதுகாப்புப் பயிற்சிகள் மற்றும் சமூக மட்டத்திலான திட்டங்கள் ஆகியவை, இலங்கைத் தீவில் அமெரிக்கா தனது 'பிடி'யை எந்தளவுக்கு இறுகச்செய்ய முயல்கிறது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் எரிக் மேயர் பதவியேற்று ஒரு மாதம் நிறைவடைவதற்குள்ளாகவே, தூதரகத்தின் பிரதிப் பிரதானியாக டேவிட் மயர்ஸ் வருகை தந்துள்ளமை அமெரிக்காவின் இராஜதந்திர முன்னுரிமையை உணர்த்துகிறது.

தூதரகத் தலைமைத்துவத்தில் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்ட இந்த மாற்றங்களும், அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக நடத்தப்படும் உயர்மட்ட நிகழ்வுகளும் தற்செயலானவை அல்ல.



அமெரிக்காவின் உலகளாவிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாக்கும் முகமாக, இலங்கை அரசாங்கத்துடனும் அதன் முக்கிய நிறுவனங்களுடனும் மிக நெருக்கமான உறவைப் பேணுவதையே இந்த இராஜதந்திர நகர்வுகள் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளன.

இதனொரு அங்கமாக, அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பான கூட்டாட்சி புலனாய்வுப் பணியகம் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறைப்பு முகவரமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்கள் இலங்கைக்கு வருகை தந்து, பிராந்திய விசாரணை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

இலங்கை, பங்களாதேஷ், மாலத்தீவு மற்றும் நேபாளம் ஆகிய தென்னாசிய நாடுகளின் அதிகாரிகளை ஒன்றிணைத்து, அணுசக்தி பரவல் தடுப்பு, சட்டவிரோத நிதிப் பரிமாற்றங்களைக் கண்டறிதல் மற்றும் ஆபத்தான தொழில்நுட்பங்களுக்கான நிதியுதவிகளை முடக்குதல் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இது சர்வதேச குற்றத்தடுப்பு நடவடிக்கை போலத் தோன்றினாலும், இதன் பின்னணியில் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் நிலவும் வல்லரசுப் போட்டியில் தனது கண்காணிப்பு வலையமைப்பை விரிவுபடுத்தும் அமெரிக்காவின் மூலோபாய நோக்கம் மறைந்துள்ளது.

அதேபோன்று, கொழும்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கூட்டு அச்சுறுத்தல் குறைப்பு அலுவலகம் மற்றும் அட்லாண்டிக் கவுன்சில் ஆகியன இணைந்து நடத்திய பயிற்சித் திட்டமும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.



இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறை பேரவை, இலங்கை மத்திய வங்கி, கடலோரக் காவல் படை, வணிகக் கப்பல் செயலகம், துறைமுக அதிகாரசபை, பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை கடற்படை ஆகிய நாட்டின் மிக முக்கியமான அனைத்துப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு அதிகாரிகளையும் உள்ளடக்கிப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான கப்பல்களை அடையாளம் காணுதல், ஏமாற்று கடல்சார் நடவடிக்கைகளைக் கண்டறிதல் மற்றும் கடல்சார் தடைகளை எதிர்கொள்ளுதல் என்ற பெயரில், இலங்கையின் அரச மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்பிற்குள் அமெரிக்கா தனது ஆதிக்கத்தையும் கண்காணிப்பையும் மறைமுகமாக ஊடுருவச் செய்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் இராணுவ அடிப்படையிலான அணுகுமுறைகளுக்கு அப்பால், அமெரிக்கா பயன்படுத்தும் மற்றொரு சக்திவாய்ந்த கருவி 'மென் அதிகாரம்' அல்லது சமூக மட்டத்திலான அணுகுமுறையாகும். இதன் ஒரு கட்டமாகவே 'அமைதிப் படை' (Peace Corps) அமைப்பைச் சேர்ந்த 34 புதிய தொண்டர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கற்றுக் கொண்டு, உள்ளூர் சமூகங்களுக்கு அமெரிக்க ஆங்கிலத்தையும் கலாசாரத்தையும் கற்பிக்கவுள்ளனர்.

ஆறு தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடரும் இப்பாரம்பரியம், மேலோட்டமாகப் பார்க்கும்போது கலாசாரப் பரிமாற்றமாகவும் கல்விச்சேவையாகவும் தோன்றினாலும், இதன் உண்மையான நோக்கம் சாதாரண பொதுமக்கள் மற்றும் கிராமப்புற சமூக மட்டங்களில் அமெரிக்க சார்பு எண்ண ஓட்டத்தையும் அமெரிக்க விழுமியங்கள் மீதான நன்மதிப்பையும் உருவாக்குவதாகும்.

அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்க முன்னுதாரணங்களும் மூலோபாயங்களும் வரலாற்று ரீதியாக உலக நாடுகளில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த அமெரிக்கா பல்வேறு உத்திகளைக் கையாண்டுள்ளது.

1960-70களில் இந்தியப் பெருங்கடலில் உள்ள டியோ கார்சியாவில் பிரித்தானியாவுடன் இணைந்து இராணுவத் தளத்தை அமைத்து, அப்பகுதி மக்களை வெளியேற்றி, ஒட்டுமொத்த தென்னாசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தையும் கண்காணிக்கும் மூலோபாய மையமாக அமெரிக்கா அதை மாற்றியது.

இலங்கையில் நேரடியாக இராணுவத் தளங்களை அமைக்க முடியாவிட்டாலும், கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு-சேவை ஒப்பந்தம் ACSA (Acquisition and Cross-Servicing Agreement) மற்றும் படைகளின் அந்தஸ்து ஒப்பந்தம் SOFA (Status of Forces Agreement) போன்ற ஒப்பந்தங்கள் மூலமும், கடற்படை நிபுணத்துவப் பகிர்வு மூலமும் இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் வான்பரப்பைப் பயன்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க அமெரிக்கா முயல்கிறது.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் நிதி குற்றத்தடுப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் வரி ஏய்ப்பு தடுப்பு என்ற பெயரில், அந்நாடுகளின் மத்திய வங்கிகள் மற்றும் நிதி புலனாய்வுப் பிரிவுகளுக்குள் நுழைந்து, அவர்களின் பொருளாதார முடிவுகளில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தியது.

தற்போது இலங்கையிலும் மத்திய வங்கி மற்றும் துறைமுக அதிகாரசபை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம், சட்டவிரோத நிதிப்பரிமாற்றத் தடுப்பு என்ற பெயரில் நாட்டின் நிதி மற்றும் வர்த்தக அமைப்பைக் கண்காணிக்கும் வாய்ப்பைப் பெறுகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பல்வேறு அரச சார்பற்ற அமைப்புகள் மூலமாகச் சிவில் சமூகத்திற்குள் நுழைந்து, அமெரிக்க சார்புப் புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தலைமுறையை உருவாக்குவது அமெரிக்காவின் வழக்கமான பாணியாகும். இலங்கையிலும் சமாதானப் படை தொண்டர்களின் வருகை இத்தகைய நீண்டகால மென் அதிகார மூலோபாயத்தின் ஒரு பகுதியே ஆகும்.



பொதுவான எதிரியைச் சுட்டிக்காட்டி பிணைப்பை ஏற்படுத்துதல் என்ற கோட்பாட்டின்படியே பனிப்போர்க் காலத்தில் கம்யூனிச அச்சுறுத்தலைக் காட்டி ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் தனது ஆதிக்கத்தைப் பரப்பியது அமெரிக்கா.

தற்போது இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் 'சீனாவின் கடன்பாடுகளும் கடல்சார் ஆக்கிரமிப்புகளும்' மற்றும் 'அணுசக்தி பாதுகாப்பு அச்சுறுத்தல்கள்' ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி, இலங்கை போன்ற சிறிய நாடுகளைத் தன் பக்கம் இழுக்க முயல்கிறது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பிராந்தியப் புவிசார் அரசியல் சவால்களைச் சாதகமாகப் பயன்படுத்தி, தனது இராணுவ, பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர வலைப்பின்னலை விரிவுபடுத்த அமெரிக்கா முயல்கிறது.

தொடர்ச்சி: பக்கம் 14




மட்டு.நகரான்

கிழக்கில் இனமுரண்பாடுகளும் அதன் விளைவுகள் என்பது பாரியளவிலான தாக்கங்களை சமூகங்களிடையே ஏற்படுத்துகின்றன.இந்த முரண்டுபாடுகளை ஏற்படுத்தும் பிரித்தாளும் தந்திரங்கள் இந்த நாட்டில் தொடர்ச்சியாக சிறுபான்மையினங்களிடையே ஏற்படுத்தப்பட்டுவருகின்றன.

இந்த பிரித்தாளும் தந்திரங்களினால் இன்றும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுவரும் விரிசல்களும் முரண்பாடுகளும் எதிர்கால சமூகத்திற்கு மத்தியில் தொடர்ச்சியான தாக்கங்களை செலுத்திவருகின்றது. இதன் தாக்கமே இன்று அனோஜன் என்னும் இளைஞனின் விவகாரமும் தோற்றம்பெற்றிருக்கின்றது.



கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரையின்போது கல்முனைப்பகுதியில் யாத்திரைசென்றவர் அழைத்துச் சென்ற நாய் ஒன்றின் மீது முஸ்லிம் இளைஞர் ஒருவர் காலினால் அடித்த விடயம் வீடியோ எடுக்கப்பட்டு முகநூலில் பதிவேற்றியதன் காரணமாக அது தொடர்பில் இரு தரப்பினரும் மாறி மாறி முகப்புத்தகத்தில் முன்னெடுத்துவந்த கருத்துமோதல்கள் இன்று அனோஜன் என்ற இளைஞன் மரண தண்டனைக்குள்ளாகும் வரையில் கொண்டுசென்றுள்ளது.

அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் முகப்புத்தகத்தில் திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கப்படும் போலிக் கணக்குகள் மற்றும் பக்கங்கள் மூலம் உணர்ச்சிவசப்படக்கூடிய எல்லை மற்றும் நிலச் சிக்கல்கள், கடந்தகால யுத்த கால வடுக்கள், மற்றும் மத-பண்பாட்டு அடையாளங்கள் தொடர்பில் பொய்யான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துகளும் பரப்பப்படுகின்றன.



சில சுயநல அரசியல் சக்திகளும் அடிப்படைவாதக் குழுக்களும் தங்களின் குறுகிய அரசியல் லாபங்களுக்காகவும் வாக்கு வங்கிக்காகவும் இத்தகைய வெறுப்புப் பிரசாரங்களை இணைய வழியில் தீவிரப்படுத்துகின்றன. இத்தகைய இணையவழிப் பிரசாரங்கள் வெறுமனே டிஜிட்டல் தளத்துடன் நின்றுவிடாமல், நிஜ வாழ்வியலிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, களயதார்த்தத்தை உணராத இளம் தலைமுறையினர் இந்த போலிப் பிரசாரங்களால் எளிதில் ஈர்க்கப்பட்டு இனவாதப் போக்குக்குத் தள்ளப்படுகின்றனர்.

சவூதி அரேபியாவில் பணிபுரிந்த கல்முனையைச் சேர்ந்த தமிழ் வாலிபரான சிவராசா அனோஜனுக்கு, சமூக வலைத்தளத்தில் வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்துக்காக சவூதி நீதிமன்றத்தால் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட சம்பவம், இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மீண்டுமொரு முறை இனவாதப் போக்கையும் உணர்ச்சி கொந்தளிப்புகளையும் தூண்டியுள்ளது.இச்சம்பவம், அதன் சட்ட மற்றும் சமூகப் பரிமாணங்கள், மற்றும் கிழக்கில் மேலெழும் இனவாத முகம் குறித்துப் பின்வரும் பந்திகளில் விரிவாகப் பார்ப்போம்.

சவூதி அரேபியாவில் பணிபுரிந்து வந்த கல்முனை, நற்பிட்டிமுனையைச் சேர்ந்த சிவராசா அனோஜன், முகப்புத்தகத்தில் மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலான கருத்து ஒன்றை அமைத்ததாகக் கூறி கைது செய்யப்பட்டார். அவருக்கு ஆரம்பத்தில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்ட நிலையில், மேல்முறையீட்டின் போது அத்தண்டனை மரண தண்டனையாக உயர்த்தப்பட்டது. இத்தீர்ப்பு, அவரது ஏழைக் குடும்பத்திற்கும் ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மனிதநேய அடிப்படையில் அவரது உயிரைக் காப்பாற்ற அரசாங்கமும் இராஜதந்திரத் தரப்புகளும் அவசர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.



ஒரு தனிநபரின் சட்டரீதியான மற்றும் உணர்ச்சிவசப்பட்ட தவறை, கிழக்கில் உள்ள சில தீவிரவாத மற்றும் அரசியல் சக்திகள் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடாக உருமாற்ற முற்படுகின்றன. இணைய வழியிலும் சமூக ஊடகங்களிலும் ஒரு தரப்பினர் இதனை மத ரீதியான தாக்குதலாகப் சித்தரிப்பதும், மறுதரப்பினர் இதனை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதான வஞ்சனையாகப் பரப்புவதும் கிழக்கின் நச்சு அரசியல் முகத்தை மீண்டும் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. சவூதி நாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பை, கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒரு கருப்பொருளாக மாற்றுவது வரலாற்று ரீதியான தமிழ்-முஸ்லிம் உறவில் பிளவை ஏற்படுத்தும் ஆபத்தான முயற்சியாகும்.

கிழக்கு மாகாணத்தில் மேலெழும் இனவாதப் போக்குகளுக்குப் பின்னால் ஆழமான அரசியல் மற்றும் நிலவியல் காரணங்கள் உள்ளன. தேர்தல் காலங்களில் வாக்குகளைச் சேகரிப்பதற்காகச் சில அரசியல்வாதிகள் மற்றும் தீவிரவாத அமைப்புகள் இனவாதத்தை முதன்மையான ஆயுதமாகப் பயன்படுத்துகின்றன. எல்லை நிர்ணயம், பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைச் சிக்கல்கள் மற்றும் காணி உரிமைகள் சார்ந்த விவகாரங்களை வரலாற்று ரீதியான உண்மைகளுடன் அணுகாமல், இனச் சாயம்பூசி உணர்ச்சிவசப்பட்டப் பிரச்சினைகளாக மாற்றுவது காலங்காலமாக நடக்கும் ஒரு தந்திரோபாயமாகும்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக, அண்மைக்காலமாக முகப்புத்தகம் போன்ற சமூக ஊடகங்கள் இனவாதத்தைப் பரப்பும் பிரதான தளங்களாக மாறியுள்ளன. போலிக் கணக்குகள் மூலம் கடந்தகால கசப்பான சம்பவங்களை மீள நினைவூட்டுவதும், தனிநபர் குற்றங்களைச் சமூகத்தின் குற்றமாகச் சித்தரிப்பதும், வெளிநாடுகளில் நடக்கும் சம்பவங்களைக்கூட உள்ளூர் தமிழ்-முஸ்லிம்-சிங்கள மோதல்களாக உருமாற்றுவதும் இளைஞர்கள் மத்தியில் இனவாத நஞ்சை விதைக்கின்றன. இவ்வாறான நிலையில் அனோஜனின் மரண தண்டனை அறிவிப்பிற்கு பின்னர் கிழக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களிடமும் நல்ல பல விடயங்களும் நடந்து வருகின்றது என்பதை சொல்லவேண்டிய அவசியமும் இருக்கின்றது.



பொதுவாகக் கிழக்கு மாகாணத்தில் நிகழும் உணர்ச்சிகரமான சம்பவங்களைச் சில சுயநலச் சக்திகள் தமிழ்-முஸ்லிம் முரண்பாடாக மாற்ற முற்படும் பின்னணியில், அனோஜனின் விவகாரத்தில் வெளிப்பட்ட சில அணுகுமுறை வேறுபட்டதாக இருந்தது. சட்ட ரீதியான சிக்கலையும் ஒரு இளைஞனின் உயிருக்குப் போராடும் ஏழ்மை நிலையையும் உணர்ந்த இரு சமூகங்களின் சிவில் தலைவர்களும், பொதுமக்களும், புலம் பெயர் அமைப்புகளும் இன, மத வேறுபாடுகளைக் கடந்து மனித நேய அடிப்படையில் ஒன்றிணையத் தொடங்கினர்.

குறிப்பாக, சவூதி அரேபியாவின் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு இராஜதந்திர ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகளுக்குத் தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகளும், அரசியல் பிரதிநிதிகளும் இணைந்து ஆதரவளித்தனர். சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட வெறுப்புப் பேச்சுகளை நிராகரித்து, அனோஜனின் குடும்பத்திற்கு ஆதரவாகவும் அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கான இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் இரு சமூகங்களின் குரல்களும் அமைந்தன.

ஒரு கசப்பான சம்பவமானது கிழக்கில் வழக்கமாக உருவாக்கப்படும் இனவாதக் கட்டமைப்பை உடைத்து, மனித நேயமே பிரதானமானது என்பதை உணர்த்திய தருணமாக இது மாறியுள்ளது. தனிநபர் தவறுகளையோ அல்லது வெளிநாட்டுத் தீர்ப்புகளையோ உள்ளூர் இன மோதல்களாக மாற்றாமல், சட்ட ரீதியாகவும் மனிதநேய அடிப்படையிலும் அணுகும் முதிர்ச்சியை இச்சம்பவம் தெளிவுபடுத்தியுள்ளது. இத்தகைய மனிதநேயக் கூட்டுச் செயற்பாடுகளும் பரஸ்பர ஆதரவுமே கிழக்கு மாகாணத்தின் உண்மையான பலமாகும். அனோஜனின் விவகாரத்தில் தோன்றிய இந்த இனஐக்கியமும் புரிதலும் எதிர்காலத்திலும் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நிரந்தர நல்லிணக்கத்திற்கும் அமைதிக்கும் வலுவான அஸ்திவாரமாக அமைய வேண்டும். வடகிழக்கில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் ஒரே மொழியை தாய்மொழியாகக் கொண்டு, பண்பாட்டு மற்றும் வரலாற்று ரீதியாக ஆழமான பிணைப்பைப் பகிர்ந்து கொள்ளும் இரு பிரதான சமூகங்களாகும். எனினும், கிழக்கில் இனங்களுடையே பெரும்பான்மை சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் முன்னெடுத்த பிரித்தாளும் தந்திரங்கள், கடந்த கால கசப்பான வரலாற்றுச் சம்பவங்கள், அரசியல் சுயநலன்கள் மற்றும் திட்டமிட்ட இனவாதப் பிரசாரங்கள் காரணமாக இவ்விரு சமூகங்களுக்கும்

தொடர்ச்சி: பக்கம் 14




மருதன் ராம்

இலங்கையின் பொருளாதார கட்டமைப்புக்கும் உலகளவில் இலங்கைக்கு முகவரியைப் பெற்றுத் தந்த 'சிலோன் டீ' என்ற வர்த்தக நாமத்துக்கும் அடிப்படையாக விளங்குவது மலையகத் தோட்டப் பகுதிகளில் வாழும் பெண்களின் இடைவிடாத உழைப்பாகும். மலையகப் பெருந்தோட்ட பகுதிகளில் பணிபுரியும் பெண்களும் அங்கு உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தேயிலை தொழிற்சாலைகளும், இந்தத் தேயிலை உற்பத்தியின் நுட்பங்களையும் அதன் பின்னணியில் உள்ள பெண்களின் வாழ்வியலையும் நமக்கு அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன.

அதிகாலைப் பனி மூடிய மலைச்சாரல்களில்,



சூரியன் உதிப்பதற்கு முன்பே பெண்களின் பணி தொடங்கிவிடுகிறது. தலையில் தொங்கும் கூடைகளைத் தாங்கியபடி, தேயிலைச் செடிகளுக்கு இடையே நகரும் பெண்களின் விரல்கள் மிக நுட்பமாகச் செயல்படுகின்றன. எதை பறிக்க வேண்டும், எதை விட்டுவைக்க வேண்டும் என்பதில் பெருந்தோட்ட பெண்களுக்கு பல வருடப் பயிற்சி தேவையில்லை. அது அனுபவத்தால் விளைந்த இயல்பான உணர்வாகும். "இரண்டு இலைகளும் ஒரு மொட்டும்" என்ற சரியான பதத்தை நொடிப்பொழுதில் கண்டறிந்து பறிக்கும் திறன் இவர்களின் கைதேர்ந்த உழைப்புக்குச் சான்றாகும்.

தேயிலைத் தொழிலின் சிறப்பு என்னவென்றால், இது தோட்டத்தில் கொழுந்து பறிப்பதோடு முடிந்துவிடுவதில்லை. பறிக்கப்பட்ட இலைகள் தொழிற்சாலைக்கு வந்தடைந்தது முதல் அவை ஏற்றுமதிக்குத் தயாராகும் வரை உள்ள அனைத்துக் கட்டங்களிலும் பெண்களே முதன்மைப் பங்கு வகிக்கின்றனர். இளம் பெண்கள் முதல் எழுபதுகளைத் தொட்ட அனுபவமிக்க பெண் தொழிலாளர்கள் வரை ஒரே கூரையின் கீழ் தேயிலை தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றனர். தேயிலையின் நறுமணம், அதன் பக்குவம் மற்றும் தொடு உணர்வை வைத்து அதன் தரத்தைக் கணிக்கும் நுட்பமான கலை, புத்தகங்கள் வழியே கற்பிக்கப்படுவதில்லை.

மாறாக, மூத்த பெண் தொழிலாளர்களிடமிருந்து இளைய தலைமுறையினருக்கு இயல்பாகக் கடத்தப்படுகிறது. பறிக்கப்பட்ட பச்சை இலைகள் சுவைமிக்க தேயிலையாக மாறுவதற்குப் பல கவனமான படிநிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது. முதலாவதாக, பறிக்கப்பட்ட இலைகள் நீண்ட தட்டுகளில் பரப்பப்பட்டு, சூடான காற்றைச் செலுத்துவதன் மூலம் அவற்றின் ஈரப்பதம் குறைக்கப்பட்டு வாடவைக்கப்படுகின்றன. இதன் மூலம் இலைகள் மென்மையாகி அடுத்த கட்டத்திற்குத் தயாராகின்றன.

தொடர்ந்து, கனரக இயந்திரங்கள் மூலம் இலைகள் சுருட்டப்பட்டு நொறுக்கப்படுகின்றன. இந்த செயல் முறையானது இலைகளுக்குள் இருக்கும் இயற்கையான எண்ணெய்களை வெளியேற்றி, சிலோன் டீயின் தனித்துவமான நறுமணத்தை உருவாக்குகின்றது. இதனைத் தொடர்ந்து நடைபெறும் மிக முக்கியமான கட்டம் ஆக்சிஜனேற்றம் ஆகும். குளிர்ந்த மற்றும் ஈரப்பதமான அறைகளில் வைக்கப்படும் இலைகள், படிப்படியாக பச்சை நிறத்தை இழந்து அடர்ந்த செம்புப் பழுப்பு நிறத்திற்கு மாறுகின்றன.

இக்கட்டத்தில் நேரத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல், இலைகளின் நிறம், பக்குவம் மற்றும் மணத்தை வைத்து அவை அடுத்த கட்டத்திற்குத் தயாராகிவிட்டனவா என்பதைத் தொழிலாளர்கள் தங்களின் அனுபவத்தால் தீர்மானிக்கின்றனர். இறுதியாக, விறகு அடுப்புகள் மூலம் தயாரிக்கப்படும் புகையில்லாத சூடான காற்றைக் கொண்டு இலைகள் உலர்த்தப்பட்டு, அவற்றின் தரம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

இந்தத் தயாரிப்புப் பணியில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான இயந்திரங்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில், அதாவது 19 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டவை ஆகும். சுமார் நூறு ஆண்டுகளைக் கடந்த இந்த இயந்திரங்கள் அருங்காட்சியகப் பொருட்களாக இல்லாமல், தொழிலாளர்களின் சிறந்த பராமரிப்பினால் இன்றளவும் தங்கு தடையின்றி இயங்கி வருகின்றன.

தற்போது பல தேயிலை தொழிற்சாலைகளில் மின்சாரத்தைக் கொண்டு தேயிலையை அரைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் பெரும்பாலான தொழிற்சாலைகளில் ஆரம்பகால முறையான விறகுகளைக் கொண்டு தேயிலை அரைக்கும் செயற்பாடு இன்றும் பயன்பாட்டில் உள்ளது. இருப்பினும், இந்த பிரம்மாண்டமான உற்பத்தி அமைப்பின் பின்னால் ஒரு கசப்பான உண்மை மறைந்துள்ளது.

உலகளவில் தேயிலை உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் முன்னணி வகிக்கும் ஒரு நாட்டின் பொருளாதாரத் தூண்களாக இருக்கும் தோட்டத் தொழிலாளர்கள், நாட்டின்



மிகவும் பொருளாதாரப் பாதுகாப்பற்ற பிரிவினராகவே எஞ்சியுள்ளனர். செங்குத்தான, வழுக்கக்கூடிய மலைப் பாதைகளில் 18 முதல் 20 கிலோகிராம் எடையுள்ள கூடைகளைத் தலையில் சுமந்தபடி, கடும் மழை மற்றும் வெயிலைப் பொருட்படுத்தாமல் நாளொன்றுக்கு 8 முதல் 10 மணிநேரம் இவர்கள் உழைக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக ஆண் தொழிலாளர்களின் வேலை நேரத்தை விட பெண் தொழிலாளர்களின் வேலை நேரம் அதிகமாகவே உள்ளது. அத்துடன், முறையான ஊதியமின்மை மற்றும் பணவீக்கம் காரணமாக இவர்க ளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவர் கள் ஈட்டித் தரும் வருமானத்துடன் ஒப்பிடுகையில், இவர்களுக்குக் கிடைக்கும் மாத ஊதியம் இவர்களது குடும்பத்தின் அடிப்படை உணவுத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை.

மலையகத் தோட்டப் பகுதிகளில் வாழும் குடும்பங்களில் கணிசமான சதவீதத்தினர் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். விலைவாசி உயர்வு மற்றும் குறைந்த வேதனம் காரணமாக, பல தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் பசியைப் போக்குவதற்காகத் தாங்கள் பட்டினியாக இருக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உலகச் சந்தையில் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பல கோடிகளை ஈட்டித் தரும் சிலோன் டீயின் ஒவ்வொரு துளி சுவையிலும், இந்த மலையகப் பெண்களின் சிந்திய வேர்வையும் கண்ணீரும் கலந்திருப்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

மலையகத் தோட்டப் பகுதிகளில் வாழும் குடும்பங்களில் 44 சதவீதத்திற்கும் அதிகமானோர் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டு வருவதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டுகிறது.

இது நகர்ப்புற நிலையை விட இரு மடங்கு அதிகமாகும். அதிகரித்துச் செல்லும் விலை உயர்வு மற்றும் குறைந்த கூலி காரணமாக, பல தாய்மார்கள் தங்கள் மக்களின் பசியைப் போக்குவதற்காகத் தாங்கள் பட்டினியாக இருக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தேயிலைத் தோட்டங்களில் மிதந்து வரும் நறுமணத்தின் பின்னணியில், தலைமுறை தலைமுறையாகத் தங்கள் வாழ்க்கையையே உரமாக்கிக் கொண்டிருக்கும் இந்த மலையகப் பெண்களின் உழைப்பு வெறும் பொருளாதாரப் புள்ளிவிவரங்களால் அளவிட முடியாதது. நாட்டின் அந்நியச் செலாவணியைத் தீர்மானிக்கும் முதன்மைச் சக்தியாகத் திகழும் பெருந்தோட்ட பெண்களுக்கு, முறையான நியாயமான ஊதியம், உழைப்பிற்கேற்ற பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட வாழ்வாதார உரிமைகள் உறுதி செய்யப்படாதவரை, 'சிலோன் டீ'யின் உலகளாவிய பெருமை முழுமையடையாது.

உலகமே சுவைத்துக் மகிழும் ஒவ்வொரு கோப்பை இலங்கைத் தேயிலையிலும் மறைந்திருக்கும் இந்தத் தியாகக் கதைகள் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களின் நல்வாழ்விற்கான நிரந்தரத் தீர்வுகள் எட்டப்படுவதே வரலாற்று ரீதியாக அவர்களுக்குச் செய்யப்படும் உண்மையான நீதியாகும்.

## ஜெர்மனியின் பொருளா... தொடர்ச்சி...

என்று அழைக்கிறது, மேலும் தொழிலாளர் மன்றம் இதற்குப் பதிலாக வாரத்திற்கு 30 மணிநேர வேலையை முன்மொழிந்தது.

இதற்கிடையில், மெர்சிடிஸ் நிறுவனம் தனது ஹங்கேரிய ஆலையின் உற்பத்தித் திறனை ஆண்டுக்கு 400,000 கார்களாக இரட்டிப்பாக்கியுள்ளது, இது எந்தவொரு ஜெர்மன் ஆலையையும் விடப் பெரியது. ஜெர்மனியில் ஒரு மணிநேரத்திற்கு €49.50 ஊதியம் வழங்கப்படும் நிலையில், இங்கு தொழிலாளர் ஊதியம் €15.60 ஆக உள்ளது.

ஃபோக்ஸ்வேகன் 60,000 வேலைகளையும், பிஎம்டபிள்யூ 8,000 வேலைகளையும் குறைக்கின்றன, மேலும் சுமார் 175,000 வாகனத் தொழிலாளர்கள் திங்கட்கிழமை அன்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஜெர்மனி தனது பொருளாதாரத்தை கார்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைத்தது, ஆனால் இப்போது அந்த முழு இயந்திரமும் தள்ளாடுகிறது.

## யாழ். பல்கலைக்கழக... தொடர்ச்சி...

ஈடுபட்ட மாணவர்கள் கேட்டிருந்த நிலையில், காவல் நிலையத்திற்கு வந்து பொறுப்பதிகாரியிடம் கதைக்குமாறு காவல்துறையினர் கூறியிருந்தனர் இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் நினைவிடத்தில் பயன்படுத்திய ஒலிபெருக்கிகளை காவல்துறையினர் எடுத்துச் சென்ற நிலையில், பல தடவைகள் கேட்டும் அந்த ஒலிபெருக்கிகளை இதுவரை வழங்கவில்லை என்றும், அதற்கான அனுமதியும் இதுவரை கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், பல்கலைக்கழகத்தில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் பெயர் விபரங்களையும் பதிவு செய்த காவல்துறையினர் உடனடியாக ஒலி பெருக்கிகளை கழற்றுமாறும் கூறியதால் முரண்பாடு ஏற்பட்டது.

இவ்வாறாக குழப்பம் ஏற்படுத்தும் வகையில் காவல்துறையினர் செயற்பட்டதால் பல்கலைக்கழக உண்ணாவிரத போராட்டத்தில் குழப்பமும் பரபரப்பும் ஏற்பட்டது.




# தொழிலதிபர் வீரமணியின் பாலியல் வக்கிரம்... அடுத்தடுத்து சிக்கும் காவல் அதிகாரிகள் – நடப்பது என்ன?

கார்த்திக் சிவன்

உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கி எடுத்தது ஜெஃப்ரி எப்ஸ்டீன் பைல்ஸ். உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெற்ற எப்ஸ்டீன் பைல்ஸ் சம்பவங்களே நம்மை பதறச் செய்தது. அதற்கு இணையான சம்பவம் நம் அருகே நடந்துள்ளது நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.



ஜெம் கிரானைட்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் வீரமணி. அவருக்கு வயது 85. தமிழ்நாட்டின் மிகப்பெரிய தொழிலதிபரான வீரமணி, சமூகத்தில் மதிப்புமிக்க நபராகவும் வலம் வந்துள்ளார். அவருடைய பாலியல் வக்கிரங்கள் தான் தமிழ்நாட்டை அதிரவைத்துள்ளது. இந்தியாவையும் சேர்த்து அதிரவைத்துள்ளது. கடந்த 2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தனியார் அறக்கட்டளையை நடத்தும் ஹரிகரன் என்பவர், தமிழ்நாடு காவல்துறையில் பென்ட்ரைவை-உடன் கூடிய கடிதத்தை புகாராக அளிக்கிறார். அந்த பென்ட்ரைவில் 80 வயது மதிக்கத்தக்க நபர் 13 வயது சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபடும் காட்சிகள் இருந்தன. மேலும், அந்த வீடியோவில் உள்ள நபர் வீரமணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனையடுத்து, காவல்துறை எப்ஐஆர் பதிவு செய்து விசாரணை நடத்துகிறது. இதுதொடர்பாக வீரமணியிடம் விசாரணை நடத்தப்படுகிறது.



வீரமணியின் உதவியாளர் சாந்தியிடம் விசாரணை நடத்தப்படுகிறது. பாலியல் சீண்டல் நடைபெற்றதாக கூறப்பட்ட தேனாம்பேட்டையில் உள்ள வீட்டிலும் சோதனை



நடைபெறுகிறது. சில மாதங்கள் விசாரணை தொடர்ந்த நிலையில் பிப்ரவரி மாதத்தில் காவல்துறை சார்பில் நீதிமன்றத்தில், போதிய ஆவணங்கள் இல்லாததால் விசாரணையை தொடரமுடியவில்லை Closure report தாக்கல் செய்யப்படுகிறது. அப்போது முதல்வராக இருந்தவர் மு.க.ஸ்டாலின். பின்னர், ஆட்சி மாற்றம் வருகிறது.

ஆகஸ்ட் மாதத்தில் இந்த வழக்கு நீதிபதி பத்மா முன்பு விசாரணைக்கு வருகிறது. காவல்துறையின் அறிக்கையை ஏற்காத நீதிபதி பத்மா வழக்கை தொடர்ந்து விசாரிக்க உத்தரவிடுகிறார். அதனையடுத்து, துணை ஆணையாளர் ராஜலெக்ஷ்மி தலைமையில் விசாரணை தொடர்கிறது. இந்தமுறை வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்படுகிறது. தேனாம்பேட்டை வீட்டில் மீண்டும் சோதனை நடத்தப்படுகிறது. தற்போது புதிதாக கிடைத்த வீடியோ ஆவணங்களின் அடிப்படையில் ஜெம் வீரமணி, அவரது உதவியாளர் சாந்தி ஆகியோர் கைது செய்யப்படுகின்றனர். சாந்தியின் கணவர் மகேந்திர சிம்கனும் கைது செய்யப்படுகிறார். மேலும் வீரமணியின் உதவியாளரும்



கைது செய்யப்படுகிறார். முன்னதாக நடைபெற்ற காவல்துறை விசாரணையை முடக்குவதற்கு 70 கோடி ரூபாய் வரை லஞ்சமாக கொடுத்ததாக செய்திகள் வருகின்றன. அந்த பணத்தை வீரமணியின் உதவியாளர் பிரகாஷ் மூலம் ஏற்பாடு செய்து அதிகாரிகளுக்கு கொடுத்ததாக செய்திகள் வருகின்றன. இந்த பிரகாஷ் தற்போது வெளிநாட்டில் இருப்பதால் அவரை காவல்துறையால் இதுவரையில் கைது செய்யமுடியவில்லை.



இதற்கிடையில், திமுக ஆட்சியில் இந்த வழக்கு விசாரணை ஒழுங்காக நடைபெறவில்லை என்று தவெக அமைச்சர்கள் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை எழுப்பினார்கள். மேலும், காவல்துறைக்கு அழுத்தம் கொடுத்தது யார்? விசாரணையை ஒழுங்காக மேற்கொள்ளாமல் நிறுத்தியது எந்த அதிகாரிகள் என்ற கேள்வி எழுந்தது. இந்தநிலையில், இன்று புதிய புதிர் கிளம்பியுள்ளது. 2024-ம் ஆண்டே தமிழ்நாடு காங்கிரஸைச் சேர்ந்த ரஞ்சன் குமார், வீரமணி விவகாரம் குறித்து அப்போதைய காவல்துறை துணை ஆணையர் கண்ணனிடம் புகார் அளித்ததாக தெரிவித்துள்ளார். மேலும், துணை ஆணையர் கண்ணன், இந்த விவகாரத்தை அப்போதைய சென்னை காவல் ஆணையர் அருணிடம் எடுத்துச் சென்றதாக கூறப்படுகிறது. 2024-ம் ஆண்டே விசாரணையை சரியாக மேற்கொள்ளாத காவல் அதிகாரிகள் அருண், கண்ணன் காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அதேபோல, 2025-ம் ஆண்டு புகார் கொடுத்தும் உரிய நடவடிக்கை எடுக்காத யாஸ்மீனும் காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், காங்கிரஸ் எஸ்சி- எஸ்டி பிரிவு தலைவர் ரஞ்சன் குமார், தமிழக மக்கள் முன்னேற்ற கழகத் தலைவர் ஜான் பாண்டியன் ஆகியோர் சாந்தியுடன் சேர்ந்து வீரமணியை மிரட்டி பணம் பறிக்க முயன்றதாகவும் செய்திகள் வருகின்றன. நாளுக்கு நாள் இந்த வழக்கு விசாரணை தீவிரமடைந்துவருகிறது. காவல்துறை அதிகாரிகள், அரசியல்வாதிகள் கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எது எப்படியிருந்தாலும், சிறுமிகளின் வாழ்வை சீரழித்த அத்தனை பேரும் சட்டத்தின் முன்பு கொண்டு வரப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

• • •

## மட்டக்களப்பு காணி ... தொடர்ச்சி...

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சாணக்கியன் இராசமாணிக்கம் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (25) நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின்போது கேள்விகளை முன்வைத்து மேற்கண்டவாறு வினவினார். கிழக்கு மாகாணத்தில் வனவளத் திணைக்களத்தின் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன், அண்மையில் பிரதமரிடம் முன்வைத்த கேள்வி களுக்கு ஒரு மாதகாலத்துக்குள் பதிலளிப்பதாக பிரதமர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இதுவரை பதில் கிடைக்கவில்லை. அந்தக் கேள்விகளுக்கு விரைவாக பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே காணப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (24) அமைச்சுக்கள் மற்றும் அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு வனவளத் திணைக்களம் தயாராகவில்லை என்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. ஜனாதிபதியின் தீர்மானத்தையும் செயற்படுத்தாத அரச அதிகாரிகள் உள்ளமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் செயற்படும் முறைமையை ஏற்றுக்கொள்ள முடியாது. பட்டிப்பளை பிரதேசத்தில் 700 ஹேக்கர் காணியை விடுவிக்கவுள்ளதாக தற்போது குறிப்பிடப்படுகிறது.

இந்தப் பகுதியில் வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான 1500 ஏக்கர் காணியை பெரும்பான்மையினத்தவர்கள் சட்டவிரோதமான முறையில் கைப்பற்றியுள்ளனர். தற்போது 1500 ஏக்கர் காணியை விடுவித்து அவற்றை அந்த சட்டவிரோத குடியிருப்பாளர்களுக்கே வழங்க பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் மேய்ச்சல் தரைக்குரிய காணிகளை ஏன் விடுவிக்க முடியாது? என அவர் கேள்வி எழுப்பினார்.




**பாகம் 1**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபன் தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கி முப்பத்தொன்பது ஆண்டுகள் கடந்த பின்னரும், அவரது தியாகம் தமிழ் தேசத்திற்கு ஆழமான அரசியல் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து கொண்டுள்ளது. ஏனெனில், அவர் தனது உயிரை அர்ப்பணித்த அந்த ஐந்து கோரிக்கைகளும் 1987-ஆம் ஆண்டின் அரசியல் சூழலால் எழுந்த தற்காலிகக் குறைகளின் தொகுப்பு மட்டுமல்ல; அவை அரசியல் அதிகாரத்தின் அடிப்படை அம்சங்கள் சார்ந்த கேள்விகளாகும்:



தமிழர் தாயகத்தின் மீதான அதிகாரம் யாருடையது? தமிழ் நிலத்தின் பயன்பாடு மற்றும் எதிர்காலத்தை யார் தீர்மானிப்பது? தமிழ் மக்களைக் கைது செய்து தடுத்து வைக்கும் வல்லமை கொண்ட நிறுவனங்களை யார் கட்டுப்படுத்துவது? வடக்கு-கிழக்கின் அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை யார் நிர்வகிப்பது? மற்றும் பரவலான இராணுவ மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு தமிழ் மக்களின் வாழ்வு அமைய முடியுமா? - ஆகியவையே அக்கேள்விகள். எனவே, அவரது உண்ணாவிரதப் போராட்டத்தின் முக்கியத்துவம் என்பது, அவரது உடல்நிலை சீர்குலைந்த அந்த பதினொரு நாட்களை நினைவுகூர்வதில் மட்டுமல்ல; மாறாக, தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தத் தனது உயிரையே தியாகம் செய்வது அவசியம் என்று அவரை நம்பவைத்த அரசியல் சூழலைப் புரிந்துகொள்வதிலுமே அடங்கியுள்ளது.



இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபன் இந்திய அரசாங்கத்திடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தார்: பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும்; மீள்குடியேற்றம் என்ற போர்வையில் தமிழ் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்த வேண்டும்; இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் வரை அத்தகைய மீள்குடியேற்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்; வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புதிய காவல் நிலையங்களையும் இராணுவ முகாம்களையும் அமைப்பதை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும்; மற்றும் தமிழ் கிராமங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களிலிருந்து இலங்கை இராணுவமும் காவல்துறையும் வெளியேற வேண்டும், அத்துடன் இந்திய இராணுவத்தின் மேற்பார்வையின் கீழ் 'ஹோம் கார்ட்' (home guard) எனப்படும் ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
வழக்கறிஞர், அவுஸ்திரேலியா.
பேச்சாளர், தமிழ் ஏதிலிகள் கழகம்.

அவரது உண்ணாவிரதப் போராட்டத்தின் 39-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'தமிழ் கார்டியன்' (Tamil Guardian) செப்டம்பர் 2026-இல் வெளியிட்ட செய்தியில் இந்தக் ஐந்து கோரிக்கைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கைகளைத் தனித்தனியாக ஆராய்வதன் முக்கியத்துவம் என்னவென்றால், இவை அனைத்தும் ஒன்றிணைந்து, தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபன் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் போராட்டத்தைப் பற்றிய மிகப்பாரியதொரு உண்மையை வெளிப்படுத்துகின்றன. சுதந்திரம், நிலப்பரப்பு, அரசியல் நிர்வாகம், காவல் துறை, இராணுவ அதிகாரம் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான கோரிக்கைகள் இவை.



இவையனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, இன்றைய ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினையின் மையத்திலுள்ள ஒரு அடிப்படை வினா எழுகிறது: அதாவது, ஈழத் தமிழர்களுக்குத் தங்கள் தாயகத்தின் மீது அர்த்தமுள்ள அரசியல் அதிகாரம் உள்ளதா? மேலும், தமிழர் தேசிய வாழ்வின் இத்தகைய அடிப்படை அம்சங்கள் தொடர்பான முடிவுகள் இறுதியில் வேறொரு இடத்திலிருந்தே தீர்மானிக்கப்படும் நிலை தொடருமானால், சர்வதேசச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைக்கு ஏதேனும் உண்மையான அர்த்தம் இருக்க முடியுமா?

### முதல் கோரிக்கை: பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்தல்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதே 'தியாக தீபம்' லெப்டினன்ட் கேணல் திலீபனின் முதல் கோரிக்கையாக இருந்தது. இந்தக் கோரிக்கை வெறும் தனிநபர்களின் விடுதலைக்காக மட்டும் முன்வைக்கப்படவில்லை; மாறாக, கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் சிறைவைத்தல் ஆகியன ஒரு அரசால் பயன்படுத்தப்படும் மிகக் கடுமையான அதிகாரங்களில் அடங்கும் என்பதாலும், அவ்வதிகாரம் ஒரு மக்கள் கூட்டத்தின் மீது பயன்படுத்தப்படும் விதம், அம்மக்கள் அரசியல் வாழ்வில் சுதந்திரமாகப் பங்கேற்க முடியுமா என்பதைத் தீர்மானிப்பதாலும் இது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தனிநபர் சுதந்திரத்திற்கான உரிமையை அங்கீகரிக்கிறது, தன்னிச்சையான தடுப்புக் காவல்களைத் தடை செய்கிறது மற்றும் தடுப்புக் காவல் அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் அர்த்தமுள்ள சட்டப் பாதுகாப்புகளை உறுதிப்படுத்துகிறது. ஒரு அரசாங்கம் தான் செயற்படும் சூழலைப் பயங்கரவாதம் அல்லது தேசியப் பாதுகாப்பு சார்ந்த விவகாரங்களாக வரையறுப்பதன் காரணமாக மட்டும் இந்தச் சட்டக் கடப்பாடுகள் நீங்கிவிடுவதில்லை.



இருப்பினும், தமிழ் தேசியப் போராட்டத்தைப் பொறுத்தவரை, இந்தக் கோரிக்கையின் முக்கியத்துவம் தனிநபர் சிவில் உரிமைகளைத் தாண்டி நின்றது. ஏனெனில், தமிழ் அரசியல் எதிர்ப்பு மற்றும் தேசிய அந்தஸ்து தொடர்பான தமிழர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் 'அரச பாதுகாப்பு' என்ற கண்ணோட்டத்திலேயே அணுகப்பட்ட ஒரு பரந்த அரசியல் சூழலில், இத்தகைய சிறப்புப் பாதுகாப்புச் சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. எனவே, அரசைப் பொறுத்தவரை பாதுகாப்பு அச்சுறுத்தலாகக் கருதப்படுபவர்களைக் கைது செய்து தடுத்து வைக்கும் திறன் கொண்ட விரிவான பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பின் கீழ் அரசியல் நடவடிக்கைகள் நடைபெறும் சூழலில், ஒரு மக்கள் கூட்டம் தங்களது சுயநிர்ணய உரிமையை அர்த்தமுள்ள வகையில் செயல்படுத்த முடியுமா என்ற நீண்டகாலக் கேள்வியை இந்தக் கோரிக்கை எழுப்பியது. சுயநிர்ணய உரிமை என்பது வெறும் கோட்பாட்டு ரீதியான அரசியலமைப்புச் சிந்தனையாக மட்டும் இருக்க முடியாது; தன்னிச்சையான தலையீடுகள் இன்றி மக்கள் ஒன்றுகூடல், கருத்துரைத்தல், போராட்டம் நடத்துதல், நினைவுகூருதல், மாற்று அரசியல் எதிர்காலங்கள் குறித்து விவாதித்தல் மற்றும் தங்கள் கூட்டு அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்துதல் ஆகியவற்றுக்கான போதுமான அரசியல் சுதந்திரம் அதற்கு அவசியமாகும்.



இதனால்தான், தமிழர்களின் அரசியல் செயற்பாட்டுத் திறன் (political agency) அல்லது அரசியல் முன்னெடுப்பு உரிமை தொடர்பான பரந்த விவகாரத்துடன் இந்தக்

**தொடர்ச்சி: பக்கம் 14**




ஆர்க்டிக் பகுதி மிகவும் நெரிசல் மிகுந்ததாக மாறி வருகிறது. அலாஸ்கா அருகே சீனாவின் செயற்பாடுகளைத் தீவிரமாகக் கண்காணித்து வருவதாக அமெரிக்கக் கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளது; இந்த ஆண்டில் இதுவரை நான்கு சீன ஆய்வுக் கப்பல்கள் அமெரிக்க ஆர்க்டிக் பகுதியில் இயங்கியுள்ளன. இக்கப்பல் கள் சர்வதேசக் கடல் எல்லைக்குள்ளேயே நிலை கொண்டிருந்தாலும், அவற்றின் பணிகள் கடல் தரைப்பகுதி வளங்கள் அல்லது ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகள் தொடர்பானவையாக இருக்கலாம் என்று அமெரிக்க அதிகாரிகள் கவலை கொண்டுள்ளனர்.



கிரீன்லாந்து மற்றும் டென்மார்க்குடன் அமெரிக்கா ஒப்பந்தங்களை மேற்கொண்டு வரும் அதே வேளையில், ஆர்க்டிக் பகுதியில் சீனாவின் ஆதிக்கமும் விரிவடைந்து வருகிறது. கடந்த பத்தாண்டுகளாக ரஷ்யாவும் அப்பகுதியில் தனது இருப்பை நிலையாக விரிவுபடுத்தி வருகிறது. கடல் பனி உருகும்போது, புதிய கப்பல் போக்குவரத்துப் பாதைகள், இயற்கை வளங்கள் மற்றும் புவிசார் அரசியல் ரீதியான பாதிப்புக்குள்ளாகும் இடங்கள் ஆகியவை வெளிப்படுகின்றன. இம்மாற்றங்கள் வேகமெடுக்கும் அதே வேளையில், நேட்டோ (NATO), சீனா மற்றும் ரஷ்யா ஆகியவற்றுக்கு இடையிலான வல்லரசுப் போட்டியும் தீவிரமடையும்.



இந்த நிலையில் தான், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன் மற்றும் கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ்-ஃபிரடெரிக் நீல்சன் ஆகியோர், பொதுச் சபையின் ஒரு பகுதியாக, செவ்வாயன்று நியூயார்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுளனர். ஒப்பந்தத்தின் முழு உரை இன்னும் வெளியிடப்படவில்லை, ஆனால் அமெரிக்கா தனது இராணுவ இருப்பை உடனடியாக விரிவுபடுத்த முயல்கிறது என்று ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

டென்மார்க் மற்றும் தன்னாட்சி பெற்ற ஆர்க்டிக் பிராந்தியத்துடன் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், கிரீன்லாந்தில் மேலும் இரண்டு இடங்களில் அமெரிக்கா தனது இராணுவ இருப்பை நிறுவ உள்ளது என ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அதே சமயம், இந்த ஒப்பந்தம் டென்மார்க்கின் இறையாண்மையை விட்டுக்கொடுக்காது என்று கோபன்ஹேகன் வலியுறுத்துகிறது.

தெற்கு கிரீன்லாந்தில் உள்ள நார்சர்சுவாக்கில், பனிப்போர் காலத்தைச் சேர்ந்த ப்ளூயி வெஸ்ட் ஒன் தளத்தை மீண்டும் திறக்கவும், தீவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள மெஸ்டர்ஸ்விக்கில் தனது இருப்பை நிறுவவும் வாஷிங்டன் திட்டமிட்டுள்ளதாக, பேச்சுவார்த்தைகள் குறித்து அறிந்தவர்களை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் திங்களன்று(21) செய்தி வெளியிட்டது.

மெஸ்டர்ஸ்விக் தற்போது டென்மார்க்கின் சிரியஸ் நாய் பனிச்சறுக்கு ரோந்துப் படையால் பயன்படுத்தப்படுகிறது. இது தொலைதூர ஆர்க்டிக் பகுதியில் உளவு பார்ப்பதற்கும், டென்மார்க்கின் இறையாண்மையை நிலைநாட்டுவதற்கும் பொறுப்பான ஒரு உயரடுக்கு இராணுவப் பிரிவாகும். கோபன்ஹேகன் கிரீன்லாந்தை போதுமான அளவு பாதுகாக்கத் தவறிவிட்டது என்பதற்குச் சான்றாக, இதுபோன்ற உளவுப் படைகளை இராச்சியம் சார்ந்திருப்பதை ட்ரம்ப் மீண்டும் மீண்டும் கேலி செய்துள்ளார்.




ட்ரம்ப் இந்த ஒப்பந்தத்தை விரிவான வார்த்தைகளில் சித்தரித்துள்ளார். கடந்த வாரம் அவர், இது அமெரிக்காவிற்கு "கிரீன்லாந்தில் பாதுகாப்பு மற்றும் பிற அனைத்து தேவைகள் மீதும் நிரந்தரக் கட்டுப்பாட்டை" வழங்குகிறது என்று கூறினார். வாஷிங்டனின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு அமெரிக்க எதிரியும் அந்தத் தீவில் ஒரு தளத்தையோ, இராணுவ இருப்பையோ நிறுவவோ அல்லது முக்கியமான முதலீடுகளைச் செய்யவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த ஏற்பாடு கிரீன்லாந்தின் இறையாண்மையை அமெரிக்காவிற்கு மாற்றுவதில்லை என்று டென்மார்க் வலியுறுத்தியுள்ளது.

"டென்மார்க் இராச்சியத்தின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டையும்", அத்துடன் கிரீன்லாந்து மக்களின் சுயநிர்ணய உரிமையையும் இந்த ஒப்பந்தம் வெளிப்படையாக அங்கீகரிக்கிறது என்று ஃபிரடெரிக்சன் கூறினார். ஆர்க்டிக் பாதுகாப்பிற்கான கட்டுப்பாட்டை வாஷிங்டனிடம் பிரத்தியேகமாக ஒப்படைப்பதற்குப் பதிலாக, நேட்டோவிற்குள் அதிகப் பொறுப்பை வைப்பதற்கான ஒரு வழியாக இந்த ஒப்பந்தத்தைக் கோபன்ஹேகன் முன்வைத்துள்ளது.

கோபன்ஹேகன் தனது நிறுவப்பட்ட "சிவப்புக் கோடுகளை" பராமரிக்கும் அதே வேளையில், ஆர்க்டிக்கில் உள்ள அமெரிக்காவின் நியாயமான பாதுகாப்பு நலன்களுக்கு இடமளிக்கத் தயாராக இருப்பதாக டேனிஷ் வெளியுறவு அமைச்சர் லார்ஸ் லோக்கே ராஸ்முசென் கூறியுள்ளார்.

கிரீன்லாந்தின் மீது அமெரிக்கக் கட்டுப்பாட்டைக் கோரிய ட்ரம்பின் தொடர்ச்சியான கோரிக்கைகளால்

தமிழில்: **ஆர்தீகன்**

தூண்டப்பட்ட பல மாத பதட்டங்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது; இந்தக் காலகட்டத்தில் அவர் சில சமயங்களில் இராணுவ அல்லது பொருளாதார அழுத்தத்தை நிராகரிக்க மறுத்துவிட்டார். கோபன்ஹேகன் மற்றும் நூக் ஆகியன அந்தப் பகுதியை வேறொரு தரப்பிற்கு மாற்றுவதற்கான எந்தவொரு முயற்சியையும் உறுதியாக நிராகரித்தன.




2004-இல் திருத்தப்பட்ட 1951-ஆம் ஆண்டின் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், வாஷிங்டன் ஏற்கனவே விரிவான ராணுவ அணுகல் வசதியைக் கொண்டுள்ளது. பனிப்போர் காலத்தில், கிரீன்லாந்தில் அமெரிக்கா 17 தளங்களை இயக்கியதுடன், 10,000-க்கும் மேற்பட்ட ராணுவத்தினரையும் அங்கு நிலைநிறுத்தியிருந்தது. தற்போது, அமெரிக்காவின் இருப்பு 'பிட்டுஃபிக் விண்வெளித் தளத்தில்' (Pituffik Space Base) மட்டுமே குவிந்துள்ளது; அங்கு சுமார் 150 அமெரிக்க ராணுவத்தினர் பணியில் உள்ளனர்.

அலாஸ்கா கடற்பகுதியில் சீனக் கப்பல்கள் தொடர்ந்து தென்படுவதால்தான், கிரீன்லாந்திற்குள் நுழைய சீனாவை அமெரிக்கா தடை செய்துள்ளது. கடலோரக் காவல்படையின் ஆர்க்டிக் தளபதியின் கூற்றுப்படி, இந்த ஆண்டு நான்கு சீன ஆய்வுக் கப்பல்கள் அமெரிக்க ஆர்க்டிக் பகுதி வழியாகப் பயணித்துள்ளன. இது கடந்த ஆண்டு ஏற்கனவே பயணித்த ஐந்து கப்பல்களின் எண்ணிக்கைக்கு நெருக்கமாக உள்ளது.



அவை அலூஷியன் தீவுகள் மற்றும் பெரிங் ஜல சந்தி வழியாகச் சென்றதோடு, சில வட துருவம் வரையும் சென்றுள்ளன. அவை சர்வதேச கடல் எல்லைக்குள் இருந்தன, ஆனால் எந்த முன்னறிவிப்பையும் வெளியிடவில்லை. அவை கடலடியில் உள்ள லித்தியம், கோபால்ட் மற்றும் அரிய கனிமப் படிவங்களை ஆராய்கின்றனவா அல்லது இராணுவ ரீதியான அனுகூலத்தைத் தேடுகின்றனவா என்பதை கடலோரக் காவல்படை கண்காணித்து வருகிறது. பெய்ஜிங் தன்னை ஒரு "ஆர்க்டிக்கிற்கு அருகிலுள்ள" நாடு என்று அழைத்துக்கொள்கிறது. மேலும், இராணுவ

தொடர்ச்சி: பக்கம் 14




2026 செப்டம்பர் 24 அன்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் (Donald Trump) மற்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் (Xi Jinping) ஆகியோர் வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் (White House) சந்தித்தமை, தற்போதைய சர்வதேச உறவுகள் (International Relations) மற்றும் உலக புவிசார் அரசியலில் (Geopolitics) முக்கியமான நிகழ்வாக அமைந்துள்ளது. உலகின் இரண்டு முக்கிய சக்திகளான அமெரிக்கா மற்றும் சீனா இடையே பொருளாதாரப் போட்டி (Economic Competition), தொழில்நுட்பப் போட்டி (Technological Competition), பாதுகாப்பு முரண்பாடுகள் (Security Tensions) மற்றும் பிராந்திய செல்வாக்குப் போட்டி (Regional Power Competition) தொடர்ந்து நிலவி வரும் நிலையில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இரு தலைவர்களும் உறவுகளை நிலைப்படுத்துவதற்கான உரையாடலை (Diplomatic Dialogue) முன்னெடுத்தாலும், Trade, Taiwan, Iran மற்றும் Technology போன்ற முக்கிய Strategic Issues (மூலோபாயப் பிரச்சினைகள்) இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன.



அமெரிக்க - சீன உறவுகளின் முக்கியமான மையப்புள்ளியாக வர்த்தகப் போட்டி (Trade Competition) மற்றும் சுங்கவரி மோதல் (Tariff Conflict) தொடர்கிறது. இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் சுங்கவரிகளை (Tariffs), ஏற்றுமதி கட்டுப்பாடுகளை (Export Controls) மற்றும் தொழில்நுட்பத் தடைகளை (Technology Restrictions) பயன்படுத்தியுள்ளன. இதன் தாக்கம் இருதரப்பு வர்த்தகத்தை (Bilateral Trade) மட்டுமல்லாமல், உலகளாவிய விநியோகச் சங்கிலிகளையும் (Global Supply Chains) பாதித்துள்ளது. தற்போதைய Trade Truce (வர்த்தக மோதல் தற்காலிக இடைநிறுத்தம்) நீட்டிக்கப்பட்டாலும், இது முழுமையான பொருளாதார ஒப்பந்தம் (Comprehensive Economic Agreement) எனக் கருத முடியாது. Artificial Intelligence – AI (செயற்கை நுண்ணறிவு), Semiconductor Technology (குறைக்கடத்தி தொழில்நுட்பம்) மற்றும் Rare Earth Minerals (அரிய கனிம வளங்கள்) ஆகியவை எதிர்கால பொருளாதாரப் பாதுகாப்பின் (Economic Security) முக்கிய துறைகளாகத் தொடர்கின்றன.



Taiwan Strait (தைவான் நீரிணை) என்பது அமெரிக்க - சீன Strategic Rivalry (மூலோபாயப் போட்டி) யின் மிக முக்கியமான Security Flashpoint (பாதுகாப்பு நெருக்கடி மையம்) ஆக உள்ளது. Beijing (பெய்ஜிங்), Taiwan (தைவான்) தனது பிரதேசத்தின் ஒரு பகுதி எனக் கருதுகிறது. அதேவேளை Washington (வாஷிங்டன்), Taiwan-ன் Self-Defence Capability (சுயபாதுகாப்புத் திறன்) தொடர் பாக நீண்டகால பாதுகாப்பு உறவுகளைப் பேணி வருகிறது. ஷி ஜின்பிங், Taiwan Independence (தைவான் சுதந்திரம்) தொடர்பாக அமெரிக்கா எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்தியதாக சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது. இதனால் Taiwan Question (தைவான் பிரச்சினை) Indo-Pacific Security (இந்தோ–பசிபிக் பாதுகாப்பு) அமைப்பின் மையப் பிரச்சினையாகத் தொடர்கிறது.




South China Sea (தென் சீனக் கடல்) பிரச்சினையும் இந்த Strategic Competition (மூலோபாயப் போட்டி) யின் மற்றொரு முக்கிய பரிமாணமாகும். Maritime Security (கடல்சார் பாதுகாப்பு), Freedom of Navigation (சுதந்திரமான கடற்பயணம்), Sea Lines of Communication – SLOCs (முக்கிய கடல் வர்த்தகப் பாதைகள்) மற்றும் பிராந்திய நாடுகளின் Sovereignty Claims (இறையாண்மை உரிமைக் கோரிக்கைகள்) ஆகியவை இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. சீனாவின் Maritime Expansion (கடல்சார் விரிவாக்கம்) மற்றும் அமெரிக்காவின் Indo-Pacific Strategy (இந்தோ-பசிபிக் மூலோபாயம்) ஆகியவை மாறுபட்ட Strategic Interests (மூலோபாய நலன்களை) பிரதிபலிக்கின்றன.

இதனுடன் Iran War (ஈரான் போர்) மற்றும் Middle East Crisis (மத்திய கிழக்கு நெருக்கடி) ஆகியவை அமெரிக்க - சீன உறவுகளுக்கு புதிய பரிமாணத்தை உருவாக்குகின்றன. Iran Conflict (ஈரான் மோதல்) காரணமாக Strait of Hormuz (ஹோர்முஸ் நீரிணை) தொடர்பான பாதுகாப்பு மற்றும் வர்த்தகப் பிரச்சினைகள் உலகளாவிய கவலையை அதிகரித்துள்ளன. அமெரிக்காவும் சீனாவும் Iran Policy (ஈரான் கொள்கை) தொடர்பாக ஒரே அணுகு முறையைப் பின்பற்றவில்லை. சீனாவின் Iran Economic Relations (ஈரானுடனான பொருளாதார உறவுகள்) காரணமாக Washington–Beijing இடையே புதிய Diplomatic Tension (தூதரகப் பதற்றம்) உருவாகும் வாய்ப்பும் உள்ளது.



Oil Crisis (எண்ணெய் நெருக்கடி) மற்றும் Energy Security (எரிசக்திப் பாதுகாப்பு) ஆகியவை இந்த புவிசார் அரசியல் சூழ்நிலையை மேலும் சிக்கலாக்குகின்றன.

A.M.L லம்பேட்

Hormuz வழித்தடத்தில் ஏற்படும் இடையூறுகள் Global Oil Supply (உலகளாவிய எண்ணெய் விநியோகம்), Oil Prices (எண்ணெய் விலைகள்), Shipping Costs (கப்பல் போக்குவரத்து செலவுகள்) மற்றும் Inflation (பணவீக்கம்) ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எண்ணெய் சந்தையில் ஏற்படும் அதிர்வுகள் உலகப் பொருளாதாரத்தின் (Global Economy) வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் நுகர்வோர் செலவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

மொத்தத்தில், Trump–Xi Summit (ட்ரம்ப்–ஷி உச்சி மாநாடு) என்பது ஒரு முழுமையான ஒப்பந்தத்தின் முடிவாக அல்லாமல் Strategic Rivalry Management (மூலோபாயப் போட்டியை நிர்வகிக்கும் முயற்சி) எனக் கருதக்கூடியதாக உள்ளது. Trade (வர்த்தகம்), Taiwan (தைவான்), South China Sea (தென் சீனக் கடல்), Iran (ஈரான்), AI (செயற்கை நுண்ணறிவு) மற்றும் Energy Security (எரிசக்திப் பாதுகாப்பு) ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. எனவே Direct Communication (நேரடி தொடர்பு), Crisis Management (நெருக்கடி மேலாண்மை) மற்றும் Strategic Stability (மூலோபாய நிலைத்தன்மை) ஆகியவை எதிர்காலத்தில் முக்கியமானதாக இருக்கும். அமெரிக்க - சீன உறவு இனி இருதரப்பு உறவாக மட்டும் இல்லாமல், Indo-Pacific Order (இந்தோ-பசிபிக் ஒழுங்கு), Global Economy (உலகப் பொருளாதாரம்) மற்றும் International Security Architecture (சர்வதேச பாதுகாப்புக் கட்டமைப்பு) ஆகியவற்றின் எதிர்காலத்தையும் பாதிக்கும் முக்கியமான Strategic Relationship (மூலோபாய உறவு) ஆக தொடரும்.

• • •

### சவூதியில் அனோஜனின்... தொடர்ச்சி...

யாத்திரை) மனிதர்களுடன் அழைத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதை இரண்டு சம்பவங்கள் வெளிப் படுத்தியுள்ளன.

முதலாவது சம்பவம், கல்முனையில் அவரை அறியாமல் ஒரு முஸ்லிம் இளைஞன் அந்த நாயைக் காலால் உதைத்தான் என்பதால், அவன் 50 ஆயிரம் தண்டப்பணம் கட்டுமாறு நீதிமன்றக் கட்டளை விடுக்கப்பட்டது.

இரண்டாவது சம்பவம், தொழிலுக்காக சவூதி சென்ற இளைஞன், இந்த நாயை உதைத்த இளைஞன் தொடர்பாக வந்த முகநூல் பதிவுக்கு ஒரு கருத்தைப் பதிவிட்டு, ஐந்து மணித்தியாலங்களுக்குப் பின்னர் அதனை நீக்கி, பகிரங்க மன்னிப்புக் கேட்டும் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட சம்பவம்.

சிந்தியுங்கள். பாத யாத்திரை கதிர்காமத்தைத் தரிசிக்கச் செல்லும் நாம், இரண்டு இளைஞர்களுக்கு ஒரு நாயை அழைத்துச் சென்றதால் தண்டனை வழங்கும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளோம்.

அதிலும், உயிரை இல்லாமல் செய்யும் மரண தண்டனைக்கும் பாத யாத்திரையில் நாயைக் கூட்டிச் சென்றதால் அல்லவா ஏற்பட்டது.

இதைக்கூட சிலர் ஏற்காமல் இருக்கலாம். கதிர்காமத் துக்குப் பாத யாத்திரையில் நாயைக் கூட்டிச் சென்றதுதான் அடிப்படைக் காரணம் என்பதே உண்மை.

### 90களில் தமிழ் மாணவர்களின் ... தொடர்ச்சி...

தமிழினம் இன்று இப்படுகொலை குறித்துப் பேசுவதற்கும் நினைவேந்தல் செய்வதற்குமான காரணமாகும். அப்படி யெனில், இத்தகைய அநீதிகளுக்கு பன்னாட்டுச் சமூகம் நீதி வழங்க வேண்டும். அதுவே இதற்குரிய தீர்வும் அணுகு முறையுமாகும்.

## தியாக தீபம் லெப்டினன்ட் ... தொடர்ச்சி...

கோரிக்கை இணைத்துப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்குத் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை இருக்குமானால், அந்த எதிர்காலம் குறித்து விவாதிக்கவும், அதை வெளிப்படுத்தவும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் கூடிய அரசியல் வெளி அவர்களுக்கு அவசியமாக இருக்க வேண்டும். அரசியல் ரீதியான வெளிப்பாடுகள் அரசின் நலன்களுக்கு முரணாக அமையும் போதெல்லாம் கட்டுப்படுத்தப்படக்கூடிய ஒரு சுயநிர்ணய உரிமை, வெறும் பெயரளவில் அங்கீகரிக்கப் பட்ட ஒன்றாக மாறி, அர்த்தமுள்ள வகையில் செயல்படுத்த முடியாத நிலையை அடையும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இரண்டாவது கோரிக்கை: தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துதல்

மறுவாழ்வு என்ற போர்வையில் தமிழ் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதே இரண்டாவது கோரிக்கையாக இருந்தது. இந்தக் கோரிக்கை நேரடியாகத் தமிழ் தேசியப் பிரச்சினையின் நிலப்பரப்பு சார்ந்த பரிமாணத்துடன் தொடர்புடையது; ஏனெனில், 'தமிழ் ஈழம்' ஆதரவாளர்கள் முன்வைக்கும் அரசியல் கோரிக்கையானது, இலங்கைக்குள் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களுக்குச் சமமான உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. மாறாக, ஈழத் தமிழர்கள் ஒரு தனித்துவமான மக்கள் கூட்டமாகத் திகழ்கிறார்கள் என்றும், வட-கிழக்கு பகுதியுடன் அவர்களுக்கு வரலாற்று, கலாச்சார, மொழி மற்றும் அரசியல் ரீதியான பிணைப்பு உள்ளது என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்; இப்பகுதியைத் தங்கள் பாரம்பரியத் தாயக மாகக் கருதும் அவர்கள், இதன் கணிசமான பகுதிகளில் வரலாற்று ரீதியாகத் தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தப் பாகுபாடு மிக முக்கியமானது; ஏனெனில், தமிழ் தேசியப் பிரச்சினையைத் தீவுகளுடனான சமூகங்களுக்கு இடையிலான வெறும் மக்கள் தொகை எண்ணிக்கை ஒப்பீடாக மட்டும் சுருக்கிவிடக் கூடாது. 'தமிழ் ஈழம்' ஆதரவாளர்களின் வாதம் என்பது மக்கள் இனம், தாயகம் மற்றும் நிலப்பரப்பு சார்ந்த சுயநிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப்படையிலானது: அதாவது, ஈழத் தமிழர்கள் ஒரு தனித்துவமான மக்கள் கூட்டமாக உள்ளனர்; இவர்களின் தேசிய இருப்பு ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புடன் பிணைக்கப்பட்டுள்ளது. எனவே, முழு இலங்கை அரசிலும் இவர்களின் மக்கள் தொகை விகிதத்தைக் கணக்கிடுவதன் மூலம் மட்டும் இவர்களின் அரசியல் நிலையை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. கோரப்படும் தமிழ்த் தாயகப் பகுதிக்குள், தமிழர்களின் மக்கள் தொகை மற்றும் வரலாற்று நிலைமையானது தீவு தழுவிய ஒப்பீட்டிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டது; அதேவேளையில், வட-கிழக்கு பகுதியில் முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களும் வசிக்கின்றன. எதிர்காலத்தில் எட்டப்படும் எந்தவொரு அரசியல் தீர்விலும், இச்சமூகங்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டு உரிமைகளுக்கு அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பு அவசியமாகிறது.

**தொடரும்.......**

## விரிவடைந்து வரும் ... தொடர்ச்சி...

ஆராய்ச்சித் தளங்களாகவும் செயல்படும் பனி உடைக்கும் கப்பல்களை இயக்குகிறது என்று பென்டகன் கூறுகிறது.

செவ்வாயன்று ட்ரம்ப் கையெழுத்திட்ட கிரீன்லாந்து ஒப்பந்தம், வாஷிங்டனின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு எதிரி நாடும் அந்தத் தீவில் தளங்களையோ அல்லது முக்கிய முதலீடுகளையோ அமைப்பதைத் தடை செய்கிறது. மேலும், இரண்டு புதிய அமெரிக்கத் தளங்களையும் சேர்க்கிறது. இது, இந்த நிகழ்வுகளுடன் ஒப்பிடும்போது முற்றிலும் மாறுபட்டதாகத் தெரிகிறது. கிரீன்லாந்தை முடக்குவது சரியான முடிவு, ஏனெனில் ஆர்க்டிக் பகுதியில் கனிம வளங்களும், அமெரிக்காவின் தாயகத்திற்குச் செல்லும் மிகக் குறுகிய பாதைகளும் உள்ளன, மேலும் பெய்ஜிங் அது குறித்துத் தெளிவாக ஆய்வு செய்து வருகிறது.

சில ஆய்வாளர்கள், கிரீன்லாந்து மீதான வாஷிங்டனின் அதிகரித்து வரும் கவனம், ரஷ்யாவை எதிர் கொள்வதை விட, தனது சொந்தக் கண்டத்தின் மீதான அமெரிக்காவின் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கும், ஐரோப்பிய சக்திகளின் செல்வாக்கைக் கட்டுப்படுத்து வதற்குமே அதிகத் தொடர்புடையதாக இருக்கலாம் என்று வாதிடுகின்றனர்.

கிரீன்லாந்தின் அதிகாரப்பூர்வ அந்தஸ்தில் மாற்றம் இல்லை என்றாலும், அமெரிக்காவின் இராணுவ மற்றும் மூலோபாய ஈடுபாட்டின் விரிவாக்கம், அந்தத் தீவு திறம்பட வாஷிங்டனின் செல்வாக்கு மண்டலத்திற்குள் நகர்கிறது என்ற கூற்றுகளுக்கு வலு சேர்த்துள்ளது.

இந்த வளர்ச்சி, அட்லாண்டிக் கடந்த உறவுகளின் எதிர்காலம் குறித்த ஒரு பரந்த விவாதத்திற்குள் பொருந்துகிறது. ஐரோப்பிய அரசாங்கங்கள் அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்களின் நம்பகத்தன்மை குறித்து அதிகளவில் கவலை கொண்டுள்ளன, அதே நேரத்தில் வாஷிங்டன் தனது ஐரோப்பிய நட்பு நாடுகள் பாதுகாப்புச் சுமையின் பெரும் பங்கை ஏற்க வேண்டும் என்று கோருவதற்கு அதிக விருப்பம் காட்டுவதாகத் தெரிகிறது.

ஐரோப்பா, அமெரிக்க இராணுவப் பாதுகாப்பை அதிகமாகச் சார்ந்திருக்கும் அதே வேளையில், ரஷ்யாவுடனான மோதலை அதிகரிக்கக்கூடிய கொள்கைகளையும் ஒரே நேரத்தில் பின்பற்றுகிறது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். இதற்கிடையில், வலுவான ஐரோப்பியப் பாதுகாப்பு நிலைப்பாட்டின் ஆதரவாளர்கள், வாஷிங்டன் தானாகவே வந்து தங்களைக் காப்பாற்றும் என்று அந்தக் கண்டம் இனிமேலும் கருத முடியாது என்கின்றனர்.

பழைய அட்லாண்டிக் கடந்த ஏற்பாடு வெளிப்படையாகவே அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது—மேலும், வேறொருவர் பாதுகாப்பளிக்கும்போது, தங்களின் வெளியுறவுக் கொள்கைக் குரலை மிகவும் வலுவாக எழுப்புவது எளிது என்பதை சில ஐரோப்பியத் தலைநகரங்கள் கண்டறிந்து வருகின்றன.

**நன்றி: ராய்ட்டர்ஸ்**

## கிழக்கில் இனமுரண்பாடு... தொடர்ச்சி...

இடையே சில இடைவெளிகளும் சந்தேகங்களும் உருவாகியிருந்தன.

அண்மைக்காலமாக மேலெழும் பிராந்திய மற்றும் தேசிய அளவிலான சவால்களை எதிர்கொள்ள வடகிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டியது மிக அத்தியாவசியமான ஒன்றாக மாறியுள்ளது.வடகிழக்கு பிராந்தியத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பாதுகாப்பிற்கு தமிழ்-முஸ்லிம் ஐக்கியமே முதன்மைத் தேவையாகும்.

எல்லை நிர்ணயம், காணி உரிமைகள், வளப் பகிர்வு மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற விவகாரங்களில் இரு சமூகங்களும் தனித்தனியாக நின்று போராடுவதை விட, பரஸ்பரம் விட்டுக்கொடுப்புகளுடன் கூடிய கூட்டுப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகளைக் காண்பதே இரு தரப்பினரதும் உரிமைகளைப் பாதுகாக்கும். குறுகிய கால அரசியல் வாக்குகளுக்காக இனவாதத்தைத் தூண்டும் சக்திகளை அடையாளம் கண்டு நிராகரிக்கும் விழிப்புணர்வு மக்கள் மத்தியில் உருவாக வேண்டும்.

பொருளாதார ரீதியாகவும் இவ்விரு சமூகங்களும் ஒன்றை ஒன்று சார்ந்தே இயங்குகின்றன. விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்படும் போது மட்டுமே வடகிழக்கின் உள்ளூர் பொருளாதாரம் வலுவடையும். உணர்ச்சிகரமான தனிநபர் சம்பவங்களையோ அல்லது சமூக வலைத்தளப் பிரசாரங்களையோ அடிப்படையாகக் கொண்டு சமூகப் பிளவுகளில் ஈடுபடுவது இரு சமூகங்களின் எதிர்காலத்தையும் கடுமையாகப் பாதிக்கும்.

சமூக வலைத்தளங்கள் மற்றும் வெகுஜன ஊடகங்கள் மூலம் விதைக்கப்படும் வெறுப்புப் பேச்சுகளை முறியடிக்க இளைஞர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் மதத் தலைவர்களின் பங்கு முக்கியமானதாகும். வடகிழக்கின் அமைதியும், அபிவிருத்தியும், அடுத்த தலைமுறையின் பாதுகாப்பான வாழ்வியலும் தமிழர்களும் முஸ்லிம்களும் கைகோர்த்து நிற்கும் பரஸ்பர நம்பிக்கையிலேயே தங்கியுள்ளன.

இன்று அனோஜனுக்கான அனைவரும் ஒன்றிணைந்து நிற்பது போன்று எதிர்காலத்தில் வடகிழக்கில் தமிழ் தேசியதாயகத்தில் உரிமைக்கான போராட்டங்களில் தமிழ் முஸ்லிம் மக்கள் கைகோர்த்து நிற்கும்போதே தமிழர் தாயகம் விடுதலைபெற்று இரு இனங்களும் நிம்மதியாக வாழும் நிலைமையேற்படும்.

## 'இந்தியப் பெருங்கடலுக்கு ... தொடர்ச்சி...

புதிய போரைத் தொடங்கினால், செங்கடல் மற்றும் பாப் அல்-மண்டேப் நீரிணையை மையமாகக் கொண்ட ஒரு புதிய போர் முனையானது அவர்களின் கண்முன்னே உருவாகக்கூடும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்."

## சமூக ஊடகங்களை ... தொடர்ச்சி...

தற்கொலை மற்றும் மனநோய் முதல், பதில்களுக்காக செயற்கை நுண்ணறிவைச் சார்ந்திருப்பதால் ஏற்படும் விமர்சன சிந்தனைக் குறைபாடான 'அறிவாற்றல் சுமை குறைப்பு' வரையிலான ஆபத்துக்களைக் குறிப்பிட்டு, "மிகவும் கடுமையான தீங்கு விளைவிக்கும் சூழ்நிலைகள்" குறித்து அவர் எச்சரித்தார். குழந்தைகள் சாட்பாட்களை அணுகுவதைத் தடுக்க, வலுவான வயதுச் சோதனைகள் உட்பட, நிறுவனங்கள் உடனடி நடவடிக்கைகளை எடுக்க முடியும், எடுக்கவும் வேண்டும் என்று அவர் கூறினார்.

கூகிள் தனது செயற்கை நுண்ணறிவு தேடல் அம்சங்கள் இளம் பயனர்கள் தகவல்களைக் கற்றுக்கொள்ளவும் ஆராயவும் உதவுகின்றன என்று வலியுறுத்தியுள்ளது. மேலும், பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் தேடுபொறி அணுகலை முழுவதுமாகத் தடுக்க முடியும் என்றும் ராய்ட்டர்ஸிடம் கூறியுள்ளது. இருப்பினும், கடந்த ஆண்டு ஒரு பத்திரிகையால் அம்பலப்படுத்தப்பட்ட மெட்டாவின் உள் கொள்கை ஆவணம் ஒன்று, அதன் சாட்பாட்கள் குழந்தைகளுடன் "காதல் அல்லது சிற்றின்பம்" சார்ந்த உரையாடல்களில் ஈடுபட அனுமதித்ததால், ஒரு நாடாளுமன்ற விசாரணைக்கு வழிவகுத்தது.

முக்கிய சமூக ஊடகத் தளங்கள், குழந்தைகள் மற்றும் பதின்வயதினருக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்த குற்றச்சாட்டுகளுக்காக பல ஆண்டுகளாக வழக்குகளை எதிர்கொண்டுள்ளன. ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவை சிறார்களை அடிமையாக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக, மெட்டா நிறுவனம் சமீபத்தில் கலிபோர்னியா மற்றும் அமெரிக்காவின் பிற 28 மாநிலங்களுடன் 17 பில்லியன் டாலர் இழப்பீட்டுத் தொகைக்கு ஒப்புக்கொண்டது, அதே நேரத்தில் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும் மறுத்தது. அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான இதேபோன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## மத்திய தரைக்கடலில்... தொடர்ச்சி...

பெற்றதாக போலந்தின் டஸ்க் ஒப்புக்கொண்டுள்ளார். நேட்டோ பிராந்தியத்தில் ரஷ்யாவின் ஊடுருவல் "ஆண்டுகளில் அல்ல, மாதங்களில்" வரக்கூடும் என்று செக் குடியரசின் உளவுத்துறைத் தலைவர் கூறுகிறார், ஆனால் உடனடித் தாக்குதலுக்கான எந்த அறிகுறிகளையும் காணவில்லை என்று லாட்வியாவின் பாதுகாப்பு சேவை கூறுகிறது. ஐரோப்பா ஏற்கனவே தனது கிழக்கு எல்லையைக் கண்காணித்து வந்தது, இப்போது அது அடிவானத்தையும் கண்காணிக்க வேண்டியிருக்கலாம்.

## உயிர்த்த ஞாயிறு... தொடர்ச்சி...

மக்களுக்கு ஓரளவு திருப்தியளித்தாலும், இதன் பின்னணியில் இருந்து சூழ்ச்சி செய்த பிரதான சூத்திரதாரிகள், மைத்திரிபால சிறிசேன, நிலந்த ஜயவர்த்தன, சுரேஷ் சலே மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீதான விசாரணைகள் நேர்மையாக நிறைவு செய்யப்பட்டுத் தண்டனை வழங்கப்படும்போதே முழுமையான நீதி கிடைக்கும்.

அதுவரை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகளை அறிந்து கொள்வதற்கான நாட்டு மக்களின் தேடலும், நீதிக்கான நியாயமான எதிர்பார்ப்பும் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

குறித்த விசாரணைகளை மேற்படி வழக்குப் போன்று தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தி முடிவுறுத்தும் 'அரசியல் இயலுமை' அநுர அரசுக்கு உள்ளதா என்பது தான் தற்போதுள்ள கேள்வி. ஏனென்றால் பாதுகாப்பு படைகளை பாதுகாப்பதில் அவர்கள் கொண்டிருக்கின்ற விசேட கரிசனைகளுக்கு செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு சான்றுபகர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

• • •

## கொக்குத்தொடுவாய் ... தொடர்ச்சி...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், உப்பளத்திற்காக 44.197 ஏக்கர் காணி பயன்படுத்தப்படுவதாகவும், அதில் சுமார் 31 ஏக்கர் தனியார் காணிகள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சட்டவிரோத உப்பளத்தால் மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரி வித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், இதனைத் தடுக்க பல்வேறு தரப்பினரிடமும் ஏற்கனவே வலியுறுத் தியதாகக் குறிப்பிட்டார்.

மேலும், உப்பளப் பணிகளைத் தடுப்பதற்கான சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கு மாறு கரைதுறைப்பற்று பிரதேசசபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், தீர்மானத்தை மாவட்ட அபிவிருத்திக்குழுவிற்கு அனுப்பவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## வலுவாகத் தடம் பதிக்கும்... தொடர்ச்சி...

அமெரிக்கப் புதிய தூதுவர் மற்றும் பிரதித் தூதுவரின் விரைவான வருகை, அதிகாரிகளின் நேரடித் தலையீடுகள், கடற்படை மற்றும் நிதியியல் துறை அதிகாரிகளுக்கான பயிற்சிகள், மற்றும் அமைதிப் படையினரின் சமூக மட்டப் பணிகள் ஆகியவை அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஒரு பரந்த உலகளாவிய மூலோபாயத்தின் பகுதிகளாகும்.

இந்தியப் பெருங்கடலில் சீனாவிற்கு எதிரான தனது பலத்தை அதிகரிப்பதற்கும், பிராந்திய பாதுகாப்பில் முன்னணிச் சக்தியாகத் திகழ்வதற்கும் இலங்கையை முக்கிய மூலோபாயத் தளமாக அமெரிக்கா பயன்படுத்த விளைகிறது என்பதை இந்தத் தொடர் நகர்வுகள் ஐயமின்றி உறுதிப்படுத்தி நிற்கின்றன.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .




# கடல்

கடலின் கதை
அலைகளின் விரல்களால்
கரையைத் தொட்டுச் செல்கிறது கடல்...

சொல்ல முடியாத கதைகளை
சத்தமில்லாமல் சொல்லிச் செல்கிறது...
வானத்தின் நீலத்தை
தன் இதயத்தில் சுமந்துகொண்டு,
நிலவின் ஒளியை
தன் அலைகளில் வரைந்து கொள்கிறது...

கரை எவ்வளவு தூரம் தள்ளினாலும்,
மீண்டும் மீண்டும் அதைத் தேடி வரும்—
அதுதான் கடலின் காதல்...
என்றும் முடிவில்லாத பயணம்...
சில நேரம் அமைதியாக,
சில நேரம் கோபமாக,
ஆனால் எப்போதும் ஆழமாக...

மனித மனதைப் போலவே
மர்மம் நிறைந்தது கடல்...
ஒரு நாள் அதன் கரையில் நின்றபோது,
என் மனதின் சத்தம் எல்லாம்
அலைகளோடு கலந்து போனது...

அப்போது புரிந்தது—
கடல் என்பது வெறும் நீரல்ல...
தொலைந்த கனவுகளின் வீடு,
சொல்லாத வார்த்தைகளின் மொழி,
தனிமைக்கு துணையாகும்
முடிவில்லாத நீலக் கவிதை...

சு.திகழினி
கன்னியா

# சூழல் பாதுகாப்பு

மனிதனது நல்வாழ்வுக்கு சூழலே முதற்காரணமாய் அமைகிறது. மனிதனது எல்லாவித தேவைகளுக்கும் சூழலே இருப்பிடமாகும். எனவே எமது வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய சூழலைப் பற்றி சிந்திப்பது மிக மிக அவசியமாகும்.

நம்மை சூழவுள்ள நிலம், நீர், வளி அனைத்தும் சூழலே ஆகும். இவை பல்வேறு காரணிகளால் மாசடைகின்றன. மனிதன் தனது தேவைக்காகவே இவற்றை மாசடையச் செய்கிறான். இயற்கை வளங்களை அழிக்கிறான். மரங்களை வெட்டுகிறான், காடுகளை அழிக்கிறான். இதனால் மண் அரிப்பு ஏற்பட வழி பிறக்கிறது. காடுகளை அழிப்பதால் மழை வளம் குன்றுகிறது.

சனத்தொகை பெருக்கத்தால் அதிகளவு உணவு உற்பத்தி அவசியமாகிறது. உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோர் உற்பத்தியை பெருக்கும் நோக்கில் அளவுக்கு அதிகமாக செயற்கை உரங்களை பயன்படுத்துகின்றனர். இதனால் மண்வளம் பாதிக்கப்பட்டு நாளடைவில் வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறுகின்றன.

கடற்கரையோரங்களில் உள்ள முருகைக்கற் பாறைகளை அகழ்ந்தெடுப்பதால் கடல் உட்புகும் அபாயம் ஏற்படுகிறது. கல் உடைக்கும் தொழிலால் கற்பாறைகள் அகழப்படுவதால் சூழல் பாதிப்படைகிறது.

இதன் விளைவே இன்று நாம் காணும் இயற்கை சீற்றங்கள். நேபாளத்தில் பனிப்பாறை உருகி வெள்ளம் வந்தது, இந்தோனேசியாவில் எரிமலை வெடித்தது, கடல் உள்நோக்கி இழுக்கப்படுகிறது. இவை எல்லாம் நாம் செய்த வினைகளே ஆகும்.

இவற்றையெல்லாம் தடுக்க மரம் நடுதல், இயற்கை உரம் பயன்படுத்துதல், கடல் வளத்தை பாதுகாத்தல் போன்ற பல முக்கிய சட்டங்களை உருவாக்கி மக்களை கடை பிடிக்க வைக்க வேண்டும். இயற்கையை நாம் பாதுகாத்தால் தான் இயற்கை நம்மை பாதுகாக்கும்.

ம.சனா
விளாங்குளம்




# தாயகமும் வாழ்வும்

